# ஆஸாத்


**AZAD**

THE ONLY POLITICAL TAMIL FORTNIGHT
KUMBAKONAM

*FOUNDER:* HAJEE - M. ABDUR RAHMAN SAHIB

*EDITOR:* MAULANA ABDUL HAKEEM


19–6–50

## பொருளடக்கம்.


ஒப்பந்தத்திற்குப் பின்
இந்தியா - பாகிஸ்தான் உறவு

இந்தோ - சீனா

ஜனநாயக துருக்கி

பலஸ்தீன்
ஷா அப்துல்லா துரோகம்

பிஜ்லிஅவர்களின் இலங்கைபயணம்

செய்திகள்

கிசான் - காந்தி



ஆஸாத் தமிழ்பத்திரிகை

தனிப்பிரதி அணா 2

— எங்களிடம் —

பலவிதமான பேப்பர்கள், அக்கவுண்ட்புக்குகள், ஸ்கூல் மாணவர்களுக்கு வேண்டிய நோட்புக்குகள், பெப்பர்மிண்ட்கள், சோப்புகள் செண்டுகள், பேட்ரிலெட், பீங்கான், கண்ணுடிசாமான் வகைகள், பனியன்கள், சூட்கேஸ்கள், குடைகள் இன்னும் மற்ற ஷாப் சாமான்களும் கிடைக்கும்.

*



**K. M. P. பக்கிரிசாமி பிள்ளை**

ஜவுளி அண்டு ஜெனரல் மர்ச்செண்ட்,

கடைத்தெரு, — கும்பகோணம்.

'AZAD' NATIONAL
TAMIL
BI-MONTHLY
KUMBAKONAM.

# ஆஸாத்

தமிழ் தேசிய
மாதமிருமுறை பத்திரிகை
கும்பகோணம்.

மலர் 3 | விக்ருதுஸு ஆனிமீ 5உ (19-6-1950) ஹிஜிரீ 1368 ரம்ஜான்மீ 2உ திங்கட்கிழமை | இதழ் 5

CONNEMARA PUBLIC LIBRARY 1955 MADRAS

## ஒப்பந்தத்திற்குப் பின்
# இந்தியா-பாகிஸ்தான் உறவு
## உடன்பாட்டின் நற்பலன்.

நேரு லியாகத் ஒப்பந்தத்துக்குப்பின் ஆறு வாரங்கள் ஆகிவிட்டன. இக்குறுகிய காலத்தில் இருநாடுகளும் மேற்கொண்ட முறைகள், டாக்டர் சியாம பிரசாத் முகர்ஜி, கே. சி. நியோகிபோன்ற வகுப்புவாதிகளின் சந்தேகங்களையும் ஆதாரமற்றவையென நிரூபித்து விட்டன. இன்று இருதரப்பாரின் நேர்மையில் சந்தேகம் கொள்ளவோ, ஒப்பந்தம் மிக வேகமாய் முன்னேறி நற்பலன் அளிப்பதை மறுக்கவோ எவராலும் முடியாது. இருபுறத்திலும் வதியும் சிறுபான்மையினரின் பீதியைப் போக்கி, நம்பிக்கை வளரச் செய்வதே உடன்பாட்டின் முக்கிய நோக்கமாகும். உடன்பாட்டின் வெற்றி தோல்வியை சிலர் பிரிவினையாலும் தவிர்க்கமுடியாத காரணங்களும் தோன்றியுள்ள சில பிரச்னைகளுடன் சம்பந்தப்படுத்தி அவற்றால் இருநாடுகளும் கொண்டுள்ள நேர் எதிரான கொள்கைகளைக் காண அவநம்பிக்கை கொள்கின்றனர். ஆனால் நேரு—லியாகத் ஒப்பந்தம் வெறும் அரசியல் பொருளாதார நோக்கத்தைக் கொண்டதல்ல, மனிதத் தன்மையின் அடிப்படையில் எழுந்தது என்பதை அக்குறுகிய மனப்பான்மையுள்ளவர்கள் அறியவில்லை. ஏப். 10ம் தேதி பார்லிமெண்டில் பேசிய பண்டித நேருவும் "இவ்வொப்பந்தம் வெறும் அரசியல் பொருளாதார தேவைகளை அடிப்படையாய்க் கொண்டதல்ல, பல்லாயிர மக்களின் உயிர் உரிமைகளைக் காப்பாற்றும் மானிடத்தன்மையில் நிறைவேறியதே", என்று வற்புறுத்தியுள்ளார். இவ்வாறு கூறுகையில் நம்பிரதமர் இருநாடுகளுக்கும் யுத்தம் ஏற்பட்டால் விளையக்கூடிய அனர்த்தங்களை சுட்டிக் காட்டுகிறார். ஆறு வாரங்களுக்கு முன்னிருந்த நிலைமையை இன்றைய நிலைமையுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், நாம் விழுந்து பாழாகவிருந்த பயங்கரப்படுகுழி இன்று நம்மைவிட்டு எவ்வளவு தூரம் விலகியிருக்கிறதென்பதை அறியலாம். இவ்வித நிலைமைக்குக் காரணம் நேரு—லியாகத் ஒப்பந்தமேயல்லவா? இருபுறத்திலும் நடைபெற்றுவந்த வகுப்புவாதப் பேய்க்கூத்தையும், ரத்தவெறியாட்டத்தையும் இன்று காணவும் முடியாது. நேரு—லியாகத் ஒப்பந்தத்தின் நற்பயன் இது அல்லவென்று எவரால் கூறமுடியும்.

ஆனால் அகதிகளின் எண்ணிக்கை குறையவில்லை. அவர்களை திரும்பி சொந்த இடங்களுக்கு அனுப்புவது மிகக் கடினமாயிருக்கிறது என்பது உண்மையே. ஆனால் வெளியேறுவோரின் எண்ணிக்கை பெருமளவு குறைந்து, சொந்த இடங்களுக்குத் திரும்புவோர் அதிகரித்து வருகின்றனர் என்பது சந்தோஷமளிக்கக் கூடியதாகும். ஒப்பந்தம் ஏற்பட்டதும், அகதிகள் தங்கள் சொந்த இடங்களுக்கு திரும்பிச் சென்றுவிடுவர் என்று யாரும் நம்பவில்லை. வீடு வாசலை யிழந்து மனைவி மக்கள் சுற்றத்தார் முதலியோரை பலியிட்டு, மானமிழந்து நிர்ப்பந்தமாய் வெளியேறியவர்கள், எந்த சர்க்காரில் இந்தவித நஷ்டங்கள் அடைந்தனரோ அதே சர்க்காரை ஒப்பந்தம் ஏற்பட்டதும் நம்பிவிடுவர் என்று எதிர்பார்ப்பது, அவர்களை மானிடர்களாய் மதிக்காது, கேவலம் பிராணிகளாய் பாவிப்பதற்குச் சமமாகும். இதனால்தான் 'ஒப்பந்தத்தின் பலன் காலப் போக்கிலேயே காணமுடியும்', என்று பண்டித நேரு கூறியுள்ளார். இவ்வித நிலையில் 35 ஆயிரம் அகதிகள், கி. வங்கம் திரும்பிச்சென்றதை அறிய வருங்காலத்தில் நமக்கு நம்பிக்கை யளிக்கக் கூடியதே. சமீபத்தில் கல்கத்தாவில்கூடி இந்திய — பாக் சிறுபான்மை அமைச்சர்கள் ஸ்ரீ சி. பிஸ்வாசும் ஏ. எம். மாலிக்கும், "முதலில் கிழக்கு வங்கத்திலும் பிறகு மேற்குவங்கத்திலும் சுற்றுப்பிரயாணம் செய்து கலவரங்களால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை நேரில் கண்டு, நிலைமையை அறியவேண்டும். அகதிகள் அடைந்துள்ள பீதியை போக்கி, அவர்களுக்கு நம்பிக்கையூட்டி, சூழ்நிலையை தக்கவிதம் மாற்ற முயல வேண்டும்" என்று தீர்மானித்து, சுற்றுப்பிரயாணம் ஆரம்பித்துள்ளனர். இத்தீர்மானம் ஒரு நல்ல நட

வடிக்கை கூடாது. அதனால் இருதரப்பின் அவசரத் தேவைகளுக்கு நிச்சயம் பரிகாரம் கிடைக்கும். இச் சுற்றுப் பிரயாணத்தால் வெளியேற்றம் தடைப்பட்டு திரும்பிச் செல்வோரின் எண்ணிக்கை பெறும் அளவு அதிகரிக்கும் என்று நம்புகிறோம்.

இச்சந்தர்ப்பத்தில் சமீபத்திய குழப்பங்களால் பீதியடைந்து வெளியேறி பாகிஸ்தானுள் தஞ்சம் புகுந்த உ. பி. துர்ப்பாக்கியசாலிகளை நினைக்காமலிருக்க முடியவில்லை. இவர்கள் அநேகமாய் கலவரங்களால் பாதிக்கப்பட்டு வீடுவாசலை யிழந்து உயிரைக் காப்பாற்றிக்கொள்ள ஓடியவர்களும், பீதியடைந்து குறைந்த விலைக்கு தங்கள் ஜங்கம சொத்துக்களை விற்று வறுமையால் வாடி, முதல் இனத்தவரைவிட துரதிருஷ்ட முடையவர்களுமாவர். "உங்களுக்கு பாகிஸ்தானில் இடமில்லை ஆதலால் இந்தியாவுக்குத் திரும்பிச் செல்லுங்கள்", என்று கூறிய பாகிஸ்தானின் போக்கு மிக இரக்கமற்றதும், ராட்சசத்தன்மை வாய்ந்ததுமாகும். இனி பர்மிட் இன்றி எந்த அகதியையும் பாகிஸ்தானில் அனுமதிக்க முடியாது என்றும் அறிவிக்கப்படுகிறது. இவ்வித நடவடிக்கை எடுத்தவர்கள் வேறு யாருமல்ல, இந்திய உபகண்டத்தின் பத்துகோடி முஸ்லிம்களுக்கு தனிநாடு கோரியவர்களே. உ. பி. யிலிருந்து வெளியேறியவர்கள் தாய்நாடு திரும்ப வேண்டும் என்று நாமும் விரும்புகிறோம். ஆனால் சாதக நிலைமை ஏற்பட்ட பின்னரேயன்றி, கட்டாயப்படுத்தப்பட்டல்ல. சொந்த இடங்களுக்கு திரும்பும் அகதிகளுக்கு தக்க உதவி செய்யப்பட்டு, உயிருக்கும் உடைமைக்கும் தக்க பாதுகாப்பளிக்கப்படும் என்று நேரு—லியாகத் ஒப்பந்தம் கூறுகிறது. கிழக்கு—மேற்கு வங்கத்தில் நிலவியுள்ளதுபோல் உ. பி. யிலும் சமாதானம் நிலவியுள்ளது. கிழக்கு—மேற்கு வங்க அகதிகளுக்கு சமாதானம் நிலவியும் குடியேற ஏதோ ஒன்றின் அவசியம் இருக்கிறதென்றால் அது உ. பி. வை விட்டு வெளியேறியவர்களுக்கும் அவசியமல்லவா?

உ. பி. யிலிருந்து வெளியேறிய முஸ்லிம்களை நிர்ப்பந்தப்படுத்தி திரும்பச்செய்தால் அதனால் எவ்வித பலன் உண்டாகுமென்பதை பாக் அரசாங்கத்திற்கு எடுத்துக்கூறுவது அவசியமா? அத்துர்ப்பாக்கியசாலிகளின் பிரச்னையை மனிதத்தன்மையுடன் அணுக தயாராயில்லாவிடில் அவர்களே பாகிஸ்தான் ஜனனத்திற்கு காரணமான குற்றவாளிகளாய் பாவிக்கப்படுகின்றனர் என்பதை பாகிஸ்தான் மறந்துவிடக்கூடாது. இந்திய முஸ்லிம்கள் கோரியிருக்காவிடில் இன்று பாகிஸ்தான் தனி நாடாய் இருக்கமுடியாது. ஆனால் இன்று உ. பி. முஸ்லிம் அகதிகளிடம் பாகிஸ்தான் நடந்துகொள்ளும் முறை வருந்தவேண்டியது மட்டுமல்ல, வெட்கப்பட வேண்டியதுமாகும். அவ்வபாக்கியசாலிகளைக்குறித்து பாகிஸ்தானின் போக்கு மாறுவிடில் அவர்கள் பயமின்றி திரும்பிவரத்தக்க சூழ்நிலையை ஏற்படுத்துவது இந்திய சர்க்காரின் கடமை என்பதை வற்புறுத்துகிறோம். இந்திய சர்க்கார் அவர்களை வாபஸ் பெறவும், சொத்துக்களை திருப்பி அளிக்கவும் தயாராயிருப்பதைக்காண நாம் சந்தோஷமடைகிறோம். ஆனால் வெளியேற்ற பர்மிட் பரிசீலனை சட்டத்தை பாகிஸ்தானும் தளர்த்த வேண்டும். ஒன்று பாகிஸ்தான் தஸ்தாவேஜுகளை ஏற்கவேண்டும் அல்லது ஜில்லாவாரி பரிசீலனை அதிகாரிகளுக்கு இன்னும் சற்று அவகாசம் அளிக்க வேண்டும். அதனால் சொந்த இடங்களுக்கு திரும்பும் அகதிகளின் துரதிருஷ்டகால அளவு குறைந்துவிடும். நம் சர்க்கார் பிரச்னையை சகல அம்சங்களிலும் தீர ஆலோசிக்கும் என்று நம்புகிறோம்.

சமாதானத்தை நிலவச்செய்து, வகுப்புவாத புயலை அடக்கிய நேரு—லியாகத் ஒப்பந்தம், மற்றும் பல பிரச்னைகளும் தீர வழி செய்துள்ளது. இடைக்கால வியாபார ஒப்பந்தம் நிறைவேறியதை யாவரும் அறிவர். வாய்க்கால் நீர்ப்பாசனத்தைப்பற்றி நடைபெறும் பேச்சு வார்த்தைகளின் போக்கும் வெற்றி நிச்சயம் என்பதை உறுதிப்படுத்துகிறது. நிர்வாக நிபுணர்கள் ஒற்றுமையாக உழைத்து வருகின்றனர். ஆகவே சுமுக உறவு மாளிகை வானளாவி கம்பீரமாய் காட்சியளிக்கப்போவது திண்ணம்.

பரஸ்பர போக்குவரத்துக்கும் சாமான் போக்குவரத்துக்கும் பேச்சுவார்த்தைகள் நடைபெறுகின்றன. பாக் தூதுகோஷ்டியினர் தற்சமயம் புதுடில்லியில் இருக்கின்றனர். ரயில்போக்கு இணைப்பு ஆலோசனையிலிருக்கிறது. அதனால் கிழக்கு—மேற்கு—அஸ்ஸாம் மாகாண போக்குவரத்து சீர்படுவதுபோல் மேற்கு கிழக்கு பாஞ்சாலமும் இணைந்துவிடும். மேற்கூறிய திட்டங்களுக்கு தடையாயிருப்பது பாக்—இந்திய மதிப்பீட்டின் வித்தியாசமேயாகும். பாக் தூது கோஷ்டியினர் சிலர் கராச்சியில் ஆலோசிக்கச் சென்றுள்ளனர் என்றும் அவர்கள் திரும்பியதும் பேச்சு வார்த்தை தொடர்ந்து நடைபெறுமென்றும் கூறப்படுகிறது. அகதிகள் சொத்து விஷயமாயும் இரு சர்க்கார்களிடையே பேச்சுவார்த்தை சமீபத்தில் ஆரம்பமாகிவிடும் என்று நம்பப்படுகிறது. அதேபோல் காஷ்மீர் பிரச்னையும் லியாகத் சாஹிபு அமெரிக்காவினின்றும் திரும்பியதும் ஆலோசிக்கப்படும். லியாகத் அமெரிக்காவினின்றும், பண்டித நேரு இந்துநேஷியாவிலிருந்தும் திரும்பியதும் டில்லியில் சந்தித்து நடத்தும் பேச்சுவார்த்தையில் முக்கிய பிரச்னையாக காஷ்மீர் விஷயமே இருக்கப்போவதாக விஷயமறிந்த வட்டாரங்களில் நம்பப்படுகிறது. இச்சந்தோஷ செய்திகள் யாவும் நேரு—லியாகத் ஒப்பந்தத்தால் ஏற்

பட்ட பலனே என்பதும், இருதரப்பாரும் திறந்த மனதுடன் சகல பிரச்னைகளையும் பரஸ்பரம் ஆலோசிக்கத்தக்க சுமுகமான சூழ்நிலையும் ஏற்பட்டுவிட்டதென்றும் நிச்சயமாய்க் கூறுவோம்.

சர்வ பிரச்னைகளும் பேச்சு வார்த்தைகளால் முடிந்துவிடும் என்றும் நம்புவதும் தவறே ஏனெனில் ஏதாவதொரு பிரச்னையில் முடிவேற்படவில்லையாயின் நேரு—லியாகத் ஒப்பந்தம் வெற்றி பெறவில்லை. ஆகவே பழைய நிலைமையே உள்ளது என்றும் வெறுப்புக் கூச்சலுக்கு சந்தர்ப்பம் கிடைத்துவிடும். நேரு—லியாகத் ஒப்பந்தத்தின் முக்கிய நோக்கம் சமாதானத்தை நிலைநிறுத்துவதேயாகும் சமாதானம் நிலவிவிட்டபின் பரஸ்பர ஒத்துழைப்புடன் சகல பிரச்னைகளுக்கும் பரிகாரம்காண முடியும் பரஸ்பர ஒத்துழைப்பு என்றால் வெறும் பேச்சுவார்த்தைகள் மட்டுமல்ல மத்தியஸ்தம், பஞ்சாயத்து, ஐ. நா. முதலிய எல்லா வழிகளும் அடங்கியதேயாகும். பேச்சுவார்த்தைகள் நற்பலன் அளிக்க தவறிவிட்டால் ஒப்பந்தத்தை எதிர்ப்பவர்கள் அதை முறியடிக்கத்தக்க காரியங்களில் ஈடுபட்டு சமாதானத்தை குலைக்க முற்படலாம். ஆகவே எவ்வித அசம்பாவிதத்தையும் சமாளிக்கவும் தயாராயிருக்கவேண்டும் இந்தியா பாகிஸ்தான் இரு நாடுகளுக்கும் கதிமோட்சம் அளிக்கக்கூடியது பரஸ்பர நேசமே ஆகவே பேச்சு வார்த்தைகள் தவறிவிடினும் சகல முறைகளிலும், நேசபாவத்துடன் முயலவேண்டும் எத்துறையில் தோல்வி ஏற்படினும் மனம் தளராது மற்றொரு துறையில் வெற்றிகாண பூரண உறுதியுடன் முயலவேண்டும். என்று இரு சர்க்கார்களைப்போல் மக்களும் மதிக்கவேண்டும். பேச்சுவார்த்தைகள் முறிவால் மக்கள் மனம் தளரக் கூடாது என விரும்புகிறோம்

---

# இந்தோ-சீனு

## — மூன்றும் உலக யுத்தத்தின் ஆரம்ப கட்டம் —

சிறு தகராறுகள் பெரும் போர்களுக்கு காரணமாகிவிடுகின்றன என்பதை யாவரும் அறிவர் ஆகவே இன்றைய கொள்கைத் தகராறுகளும் வெறும் பேச்சு யுத்தமே நாளை உலக யுத்தத்திற்கு அஸ்திவாரமாவதில் ஆச்சரியமில்லை. கொள்கை யுத்தவீரர்களும் இவ்வித சந்தேகத்தை ஆமோதிக்கின்றனர் இல்லையெனில் தினசரி பாதுகாப்பு செலவினத்தை படிப்படியாய் உயர்த்தக் காரணமில்லை உதாரணமாக பிரிட்டனின் 1950 ஆண்டு பாதுகாப்பு பட்ஜெட் 120 கோடி பவுனாகும். ஆனால் கடந்த ஆண்டில் 80-கோடி பவுனே ஒதுக்கப்பட்டது கனடாவின் ராணுவ பட்ஜட் நினைக்கவும் முடியாத அளவு 5 -கோடி டாலராகிவிட்டது. இரண்டாம் யுத்தத்தில் தோல்வியுற்ற பிரான்சும் கடந்த ஆண்டு பாதுகாப்பின் நிமித்தம் 800-கோடி பிராங்க் செலவிட்டது ஆச்சரிய மூட்டத்தக்கது. 1846ல் அது சுமார் 100 கோடி பிராங்கே செலவிட்டது தவிர அமெரிக்காவும் ரஷ்யாவும் செய்யும் பாதுகாப்பு செலவினங்கள் கணக்கிடவும் முடியாதவாறு உயர்ந்துவிட்டன ரஷ்யாவின் ராணுவசெலவு என்னவென்பதை கிரீம்லினின் சில நபர்களைத்தவிர யாரும் அறியமாட்டார்கள். ஆனால் அமெரிக்காவோ பாதுகாப்பு செலவு என்ற பெயரில்லாது, ராணுவ சம்பந்தமேயற்ற மற்ற இனங்களிலும் பிரித்து செலவிடுவதால் மொத்தசெலவென்ன என்பதை கூட்டவும் முடியாது திண்டாட நேரிடும். ஆனால் திரைமறைவில் நடத்தப்படும் அமெரிக்க-ரஷ்ய பாதுகாப்பு செலவை கணிதத்தில குறிக்கவும் முடியாது என்பது யாவருமறிந்த ரகசியம்.

கடந்த யுத்தத்தை தவிர்க்க முயர்ச்சிகள் நடந்தபோது "சர்வதேச ஸ்தாபனங்கள் யுத்தத்தை நிறுத்திவிடமுடியாது யுத்தத்தை தவிர்க்க நிச்சயமாய் விரும்பினால் ஐரோப்பிய நாடுகள் தயாரித்துள்ள யுத்த தளவாடங்கள் அனைத்தையும் அட்லாண்டிக்மஹா சமுத்திரத்தில் மூழ்கடிக்கச்செய்ய வேண்டும்" என்று பர்னாட்ஷா கூறினார். உண்மையில் யுத்த தளவாட சேகரம் யுத்தத்தை நிறுத்துவதற்குபதில் தவிர்க்க முடியாததாகி, அதை அழைக்கக்கூடியதாகிவிட்டது. உலகநாடுகள் எல்லாம் தளவாட தயாரிப்பில் ஈடுபட்டு யுத்தத்தை வருந்தி அழைக்கின்றன என்பதை சமாதான பிரியர்கள் நிச்சயமாய் அறிவர். ஆனால் யுத்த அரங்கத்தை நோக்கி விரையும் வல்லரசுகளுக்கும் அரங்கத்திற்கும் இடையில் எவ்வளவு தூரம் உள்ளது என்பதையும், அவர்கள் எப்பொழுது போய்ச் சேருவார்கள் என்பதையும் யாரும் அறியார். ஆகவே சம்பவங்களைக்கொண்டு கால அளவு நிர்ணயிக்கமுடியும்

கடந்த நான்கு ஆண்டுகளாய் தேசியவாதிகளுக்கும் ஏகாதிபத்தியவாதிகளுக்கும் இடையில் சிக்கித் தவித்துக்கொண்டிருக்கும் இந்தோசீனுவுக்கே இன்றைய சர்வதேச அரசியல் சதுரங்கத்தில் முக்கிய ஸ்தானம். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம், இந்தியா பாகிஸ்தானுடன் நடத்திய சமாதான பேச்சுவார்த்தையைப் போல் பிரஞ்சு ஏகாதிபத்தியம் இந்தோசீன தேசியவாதிகளுடன் நடத்தவும் உடன்பாடு காணவும் தயாரில்லை. தென்கிழக்கு ஆசியா கம்யூனிஸ்டு ஆதிக்கத்தில் சிக்குவதை எவ்விதத்திலும் தடைசெய்ய வேண்டும் என அமெரிக்கா விரும்புவதை பிரான்சும் ஆமோதிக்

கிறது. ஆகவே இந்தோசீனவில் கம்யூனிஸ்டு ஆதிக்கம் பரவுவதைத் தடுக்க பிரான்சுக்கு அமெரிக்கா தளவாட உதவி அளிக்கப்போவதாய் செய்திகள் கிடைத்துள்ளன. "நம இந்தோசீன கொள்கையினால் நாம் மேற்கு நாடுகளின் ஐக்கியத்திற்கு எவ்வித உதவியும் செய்ய முடியாது", என்று மோரியோ ஷூமான் பிரஞ்சு அந்நியநாட்டு மந்திரி அச்சீஸனிடம் கூறியபிறகே, பாவோடாய் சர்க்காருக்கு பதில் பிரான்சுக்கே தளவாட உதவி செய்யப்படும் என்று அவர் வாக்களித்ததாகக் கூறப்படுகிறது. சீனவில் ஏற்பட்ட அனுபவத்தினால் தேசீய துருப்புகளுக்கு அளிக்கப்படுவதற்குப் பதில் பிரஞ்சு துருப்பினருக்கே தளவாடங்கள் கிடைப்பது நலம் என்று பிரஞ்சு அரசாங்கம் வற்புறுத்தியது அது ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஷேங்கே ஷேக்கும் அவர் சர்க்காரும் உள்நாட்டுக் குழப்பங்களாலும் தவறுகளாலும் அமெரிக்க உதவியை தக்கமுறையில் பயன்படுத்தவில்லை என்பதில் சந்தேகமில்லை. அதனாலேயே ஷேங்கே சர்க்காரும் அமெரிக்கரும் கம்யூனிஸ்டுகளிடம் தோற்றனர் ஆனால் கோமிண்டாங் ராணுவம் அமெரிக்க உதவியை நல்லமுறையில் ஏன் பயன்படுத்தவில்லை? அமெரிக்க தலையீட்டையும் தங்கள் சர்க்காரின் தவறுகளையும் சீன மக்கள் பொறுக்கவில்லை என்பதல்லவா? சீனவைவிட இந்தோசீன நிலைமை மோசமானது. அந்நிய ஏகாதிபத்தியம், அதன் வால்பிடிக்கும் பொம்மை ஆட்சி, அமெரிக்க தலையீடு, இவை மூன்றும் உள்ளவரை அமெரிக்க உதவியினால் நிலைமை இன்னும் மோசமாகிவிடும் என்பது நிச்சயம். ஹோசிமின் சர்க்கார் துருப்பினர் ஏகாதிபத்திய ராணுவத்தை பல இடங்களிலும் தோற்கடித்து வருவதாலேயே பிரஞ்சு ராணுவத் திறமை எவ்விதமானது என்பதை அறியலாம். பாவோடாய் சர்க்காரும் ஒத்துழைக்காவிடில் எவ்வித நிலைமை ஏற்படும் என்பதை ஆலோசிக்கவேண்டும்: அழியும் தருவாயில் உள்ள பிரஞ்சு ஏகாதிபத்தியத்தை அமெரிக்க உதவி நெடுங்காலம் பிரகாசிக்கச் செய்ய முடியாது சீனவுக்குப்பின் மற்றொரு தவறிழைக்க அமெரிக்காவை மார்தட்டி அழைக்கவல்ல இடத்திற்கு கம்யூனிஸ்டுகளே தானே அழைத்துக் கொண்டதை சொற்பகாலத்தில் அமெரிக்கா அறிந்து கொள்ளும். பிரிட்டிஷ் காமவெல்த்தையும் இந்தோசீன பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்கும்படி அமெரிக்கா கேட்டுக்கொண்டுள்ளதாய் தெரிகிறது. இந்தோசீன வீழ்ச்சியின் பயங்கர விளைவைக் கொண்டு இந்தியாவையும் எச்சரித்துள்ளது. இந்தியாவின் கொள்கை என்னவென்பதை அமெரிக்காவும் பிரிட்டனும் தெளிவாய் அறியும். அது எந்த ஏகாதிபத்தியமும் நிலைக்க உதவாது. பிரான்சு இ. சீனவுக்கு விடுதலையளித்திருந்தால் நிச்சயமாய் இந்தியா இவ்விஷயத்தில் கவனம் செலுத்தியிருக்கும். இன்று பிரான்சு, இந்தோ சீனவின் விருப்பத்திற்கு விரோதமாய் தன் ஆதிபத்தியை வற்புறுத்துகையிலும் கம்யூனிஸ்டு எதிர்ப்புபித்தம் தலைக்கேறி ஏகாதிபத்தியம் நிலைக்க அமெரிக்க உதவுகையிலும் இந்தியா, வெறும் வேடிக்கை பார்த்துக்கொண்டே இருப்பது நிச்சயம்.

தான் செய்த உதவி வீணாகி, கம்யூனிஸ்டுகளிடம் மற்றொரு தோல்வியடையவும் அமெரிக்கா தயாராகயிருக்கிறதா? நிலைமை கடுமையானால் அமெரிக்க துருப்புகள் இ. சீனவில் இறங்கி போராடும் என்று சிலர் நம்புகின்றனர். இது எத்தனை உண்மையோ? ஆனால் ஹோசிமின் துருப்புக்களை எதிர்க்க அமெரிக்க துருப்புகள் இ. சீனவில் நுழைந்தால், ரஷ்ய துருப்புகளும், சீன துருப்புகளும் புகுந்துவிடும் என்பது திண்ணம். அவ்விதமானால் மூன்றும் மஹாயுத்தத்தை யாராலும் தடைசெய்ய முடியாது. பின் இ. சீனவே மூன்றும் உலக யுத்தத்தின் ஆரம்ப கட்டமாகாதா? இ. சீன எல்லையில் இரண்டு லட்சம் சீன துருப்புகள் குவிந்துவிட்டதாக செய்தி கிடைத்துள்ளது ஹோசிமின்னும் சீன சர்க்காரும் ஏதோ அந்தரங்க ஏற்பாடு செய்திருப்பதாயும் வதந்தி பரவியுள்ளது ஏகாதிபத்தியம், பாவோடாய் சர்க்கார் இரண்டையும் தோற்கடிக்க தேசீய தரப்பினர், மும்முர திட்டம் தயார் செய்திருப்பதாயும் தெரிகிறது. கம்யூனிஸத்தை முறியடிக்க அமெரிக்கா தயாராயிருக்கிறதென்றால் கம்யூனிஸ்டுகளும் சும்மாயிருக்கவில்லை என்பதையே இச்செய்திகள் ஊர்ஜிதம் செய்கின்றன. ஆகவே மூன்றும் யுத்தம் இவ்விடமிருந்தே ஆரம்பமாகுமென்றும் அது வெகு சமீபத்தில் உள்ளதென்றும் தெரிகிறது.

---


சிறந்த தமிழ்
... தேசீய வாரப் பத்திரிகை ....

# "ஆஸாத்"

பல்லாயிரம் வாசகர்களின் கருத்தைக் கவர்ந்த கொள்கைகள்!
சாதி, சமய, மத, பேதங்களற்ற தத்துவார்த்த அரசியல் போதனைகள்,
மாபெரும் தலைவர்களின் பூரண அனுதாபத்தையும் ஆசியையும் பெற்றுள்ளது.

சந்தா செலுத்தாத அன்பர்கள்
தங்கள் சந்தாவை உடனே
அனுப்பிவைக்கும்படி
.... கேட்டுக்கொள்கிறோம். ....

29 MAY 1955

# ஜனநாயக துருக்கி.

மேற்கில் மத்தியதரைக்கடல் கிழக்கில் கருங்கடலையும் கொண்டது துருக்கிதேசம், குளிர்கால மலைப்பிரதேசமாதலால், பழவர்க்கங்களுக்கும், மேனி அழகுக்கும் பெயர் பெற்றதுடன், வீரத்திலும் பிரக்கியாதி பெற்றதாகும். முதல் மஹாயுத்தத்திற்கு முன், இன்றைய பிரதேசமன்றி சிரியா, பாலஸ்தீனம், ஈராக், ஆர்மீனியா, அரேபிய கடற்கரைப் பிரதேசம் முதலியவற்றைக்கொண்ட துருக்கி சாம்ராஜ்யம் ஜனநாயக முறையில்லாது, முஸ்லிம் கலீபாவின் யதேச்சாதிகாரத்திற்குட்பட்டிருந்தது. இன்று துருக்கியில் அனடோலியா, குர்திஸ்தான், ஆசிய துருக்கி முதலிய பாகங்களே உள்ளன. ஆசிய பிரதேசமன்றி இவ்விராஜ்யத்திற்கு ஐரோப்பாவில் கான்ஸ்டாண்டிநோபிள், அட்ரியாநோபிள் இருபட்டணங்களும் சொந்தமானவை, பரப்பு சற்றேற முப்பதுலட்சம் சதுரமைல்களாயினும் ஜனத்தொகை ஒருகோடி எண்பதுலட்சமே. பெரும்பான்மையினர் துருக்கியர். சில யூதர், ஆர்மீனியர், கிரேக்கரும் உள்ளனர். அங்குமிங்கும் சில அரபுகளும் காணப்படுகின்றனர். சில ஆயிரம் அந்நியநாட்டினரும் வசிக்கின்றனர்.

பூகோள அமைப்பினால் துருக்கிக்கு என்றும் முக்கியஸ்தானம் இருந்து வந்துள்ளது. ஆசியா ஐரோப்பா இருகண்டங்களையும் ஒன்றுசேர்க்கும் இந்நாட்டில் இரு கலாச்சாரங்களும் மிகுதியாய்க் காணப்படுகின்றன. ஆகவே அகிலஉலகையும் ஆட்கொண்டுவிட்ட ஐரோப்பிய கலாச்சாரம் பெரும் அளவில் துருக்கியையும் பாதிப்பது தவிர்க்கமுடியாதது. முஸ்தபா கமால்பாஷாவின் தலைமையில சமுத்திரம்போல் எழுந்த துருக்கி வாலிபர்களின் போராட்டத்தினால் 1923ல் கலிபாவின் யதேச்சாதிகாரத்திற்கு சாவுமணி அடிக்கப்பட்டு ஜனநாயகமுறை ஆட்சி ஏற்பட்டது. அதாதுர்க்கின் முயற்சியால் துருக்கி தேசமே ஐரோப்பிய கலாச்சாரத்தை மேற்கொண்டுவிட்டது. அத்துடன் நோயாளிகளைப்போல் காட்சியளித்துவந்த துருக்கியர், பாட்டாளிகளாய் மாறி, விவசாயம், வர்த்தகம், கல்வி, கைத்தொழில் முதலியவை வளர, தேசம் முன்னேற வாரம்பித்தது.

உதாரணமாக விவசாயிகளை எடுத்துக்கொள்வோம். ஜனநாயக ஆட்சியால் நலம்பெறுவதில் மற்ற எந்த வர்க்கத்தினருக்கும் அவர்கள் பின்னிற்கவில்லை. சர்க்காரால் அவர்கள் அடையாத உதவியே இல்லை. இலவச விவசாய ஆலோசனைகூற சர்க்கார் சிப்பந்திகள் உள்ளனர். விவசாய யந்திரங்கள், கால்நடைகள் முதலியவற்றை வாங்க திரவியசகாயம் அளிக்கப்படுகிறது. டிராக்டர்களும் மற்ற சாதனங்களும் அளிக்கப்படுகின்றன. கிராமந்தோறும் விவசாயி சகாய நிதிஸ்தலங்கள் உள்ளன. கூட்டுறவு சங்கங்களை நிர்மாணித்து சிக்கனமுறைகள் கற்பிக்கப்பட்டுள்ளன. கடந்த காலத்தைவிட இன்று விவசாயிகள் நிலைமை மிகவும் சீர்பட்டுள்ளது. விவாக சடங்குகள் ஒன்றிலேயே விவசாயிகள் பண்டையமுறையை மேற்கொள்கின்றனர். கிராமங்களில் விவாகசடங்கை நிறைவேற்றும் சில பெரியவர்கள் மதிப்புக்குரியவர்களாய்க் கருதப்படுகின்றனர். கல்வித்துறையில் கிராமவாசிகளும் முன்னேற்றமடைந்துள்ளனர். துருக்கி முழுவதும் இலவச ஆரம்பக்கல்வி கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

கிராமங்களைவிட நகரங்கள் மிகவும் மாறுதலடைந்துள்ளன. ஒருகாலத்தில் தினசரி மூன்று ரயில் வந்த ஒரு சிறு ஸ்டேஷனும், சுற்றுப்புறத்தில் சகதியும் குப்பை மேடுகளும் நிறைந்து காணப்பட்ட ஒரு சிறு நகரமே இன்று கால் நூற்றாண்டுக்குப்பின் துருக்கியின் தலைநகராயும் இரண்டரை லட்சம் மக்களைக் கொண்டதுமான நவீன அங்கோராவாகும். இந்நகரத்தில் இன்று குப்பை கூளங்களைக் கண்ணாலும் காணமுடியாது. திறந்த, சுத்தமான அகல வீதிகள், வானளாவும் மாடமாளிகைகள், உயர்ந்த பாடசாலைகள், கலாசாலைகள், தேகாப்பியாச விடுதி, தபால்தந்தி கட்டிடங்கள், ஆஸ்பத்திரி, விவசாய கைத்தொழில் தலைமைக் காரியாலயங்கள் நிறைந்து குபேர நகராய் ஜொலிக்கிறது. கல்விச்சாலைகளில் குறிப்பாக பாடசாலைகள் சிறப்புவாய்ந்தவை. இஸ்தாம்பூல் (கான்ஸ்டாண்டிநோபிள்) நகரே துருக்கியில் கல்வித்துறையில் உயர்ந்த ஸ்தானம் வகிக்கிறது. பன்னெடுங்காலமாக மேற்கு நாடுகளின் கலைக் களஞ்சியமாய் விளங்கி வந்தது இன்று சர்வகலாசாலைகளைக் கொண்டுதான் கடந்தகாலப் பெருமைகளையும் தோற்கடித்துவிட்டது. மேற்கு, கிழக்கு நாடுகளின் கலாச்சார சந்திப்புவெனும் வழங்கப்படும் இந்நகரம் பாஸ்போரஸ் ஜலசந்தியின் இருபக்கங்களிலும் அமைந்துள்ளதாகையால் மாணவர்களுக்கு நல்ல உல்லாசமானதும் உற்சாகமூட்டக்கூடியதுமாகும்.

பழைய இஸ்தம்பூல் பிரதேசத்தை பள்ளிவாசல்கள் சமாதி கட்டிடங்கள், ஸ்தூபிகள் முதலியவை அலங்கரிக்கின்றன. ஆனால் நவீன நகரபாகத்தில், ஸ்நான குளங்கள், சமுத்திரஸ்நான துறைகள், கப்பல் தளங்கள், பாங்குக் கட்டிடங்கள், வர்த்தக காரியாலயங்கள் முதலியவை நிறைந்துள்ளன. ஜனத்தொகை சுமார் பத்து பன்னிரு லட்சமாகும். நகரத்தை சிறப்புறச் செய்பவர்கள் மாணவர்களும், தொழிலாளர்களுமே. கைத்தொழில்கள் முக்கியமாய், புகையிலையை பதப்படுத்துதல், சிகரட் தயாரிப்பு, கண்ணாடி உற்பத்தி,

கப்பல் சீர்செய்தல், தோல் பதனிடுதல், ஆல்கஹால் முதலிய திரவபதார்த்தங்கள் உற்பத்திசெய்தல், மீன் பிடித்தல் முதலியன பெரும் அளவில் நடைபெறுகின்றன. ஒரிருவகை துருக்கிய மீன்கள் அகிலஉலக உன்னத மீன்களாய் பாவிக்கப்படுகின்றன.

பழவகைகள் அதிகம் உற்பத்தி செய்யப்படுகின்றனவாதலால், உலர்ந்த பழங்கள், எண்ணெய் முதலியன அதிகம் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. ஆண்டுதோறும் 23000டன் எண்ணெயும் 41000டன் உலர்ந்த அத்திப்பழம் வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுகின்றன. ஏற்றுமதிகளில் பெரும்பாலும் பண்டைஸ்மர்ணவெனும் அஹ்மர் துறைமுகம் மூலமே நடைபெறுகிறது. இப்பிரதேசத்தில் அநேக கிரேக்கர்கள் வாழ்கின்றனர். ஆனால் பழ உற்பத்தி பெரும்பாலும் துருக்கி விவசாயிகளே செய்கின்றனர். அவர்கள் சாதாரண ஆனால் நிம்மதியான வாழ்க்கை நடத்துகின்றனர். பழங்களைப் பறித்தல், உலர்த்துதல் ஏற்றுமதிசெய்தல், பல தொழில்களும், பழங்களை அடைக்க டப்பாக்கள் தயார்செய்தல் பெரும்பாலும் பெண்பாலரால் நடைபெறுகின்றன. பகல் முழுவதும் ஸ்திரீகள் தொழிற்சாலைகளில் பழத்தொழிலில் ஈடுபடுகின்றனர். பெரும்பாலும் கீழ்நாட்டு ஆடைகளணிந்தாலும்; வாலிபப்பெண்கள் மேல்நாட்டு உடைகளையே விரும்புகின்றனர். எண்ணெய்த் தொழிலும் துருக்கியரிடமே உள்ளது. உற்பத்தியில் பெரும்பாகம் உள்நாட்டிற்கும் மிகுதி வெளிநாட்டிற்கும் உதவுகிறது. இவ்வெண்ணெய் சவர்க்கார தொழிலுக்கு மிகவும் உபயோகிக்கப்படுகிறது. அஹ்மர் உலர்ந்த பழ ஏற்றுமதி துறைமுகமாயினும், அத்தி, புகையிலை, கோதுமை, சாமை, கர்பூஜ பழம், அபினி, உயர்ரக கம்பளவிரிப்புகள் முதலிய பல பொருள்களும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன

துருக்கியில் நாகரீக நகர வாழ்க்கையில் அஹ்மர் மூன்றாம் ஸ்தானம் வகிக்கிறது. நாகரீகக் குறைவாயிருப்பினும் மதாசாரம் மிகுந்துள்ளது. இஸ்தம்பூல் அங்கோரா அஹ்மர், தவிர மற்ற பாகங்களில் பெரும்பாலும் குடியானவர்களே வசிக்கிறார்கள். அம்மூன்று பட்டணங்களின் பதினைலட்சம் மக்களைத்தவிர மற்ற ஒருகோடி அறுபது லட்சம்பேர் குடியானவர்களே அதாவது மொத்த ஜனத்தொகையுல் 90 சதவிகிதத்தினர் ஆவர். பட்டணப்பகுதியில் மேல்நாட்டு நாகரீகம் அதிகம் காணப்படினும், கிராமங்கள் கீழ்நாட்டு கலாசாரம், நாகரீகம், முதலியவற்றால் சிறப்புறுகின்றன. வாழ்க்கைமுறை உணவு, கல்வி முதலிய யாவற்றிலும் அவ்விருசாராரும் பெரும் வித்தியாசம் கொண்டிருப்பினும், யாவருக்கும் தேசீய, சமுதாயக் குறிக்கோள் ஒன்றே.

கோடையில் சூரியோதயம்முதல் அஸ்தமனம் வரை குடியானவர்கள் வயல்களில் வேலைசெய்வர். ஆனால் குளிர்காலங்களில் வீட்டைவிட்டு வெளியேற மாட்டார்கள். குளிர்காலம் முடிவடைந்த பின்பே நிலங்களை நோக்குவர். வயல்களில் இரவைக்கழிக்க மண் சுவர்களைக்கொண்டு இலை தழைகளால் வேயப்பட்ட குடிசைகளை அமைத்துக்கொள்வர். ஏழ்மை மிகுந்து இருப்பினும், இக்குடிசையின் உட்புறம் சுத்தமாகவும், நிம்மதியாகவும் இருக்கும். மழைத்தண்ணீர் ஒழுகாதவாறு கூரைகள் வேயப்படுகின்றன. குடியானவர்குடும்பம், பாய்கள், ஆட்டுத்தோல் விரிப்புகள், கம்பளங்கள், முதலியவற்றுடன் குடிசைகளில் குடியேறிவிடும். குடும்பத்தில் அநேகமாய் ஐந்து முதல் பத்து நபர்கள் இருப்பர். யாவரும் வயல்களில் வேலைசெய்வர் குடியானவர்கள். ஒருபோதும் சோம்பேறிகளாயிருக்கமாட்டார். வேலை அதிகமிருந்தால் கூலியாட்களும் நியமிக்கப்படுகின்றனர் பெண்களே அதிகம் வேலை செய்யக்கூடியவர்கள். அடுத்த பருவத்திற்கு வேண்டிய விதைகள், உரம் முதலியவற்றை வாங்கக்கூடிய அளவே ஆண்மக்கள் வேலைசெய்வர். திராக்ஷை, புகையிலை, கோதுமை, சாமை எதுவாயினும், குடியானவன் மிகவும் உழைப்பான், பாசன வாய்க்கால்களைச் சுத்தப்படுத்துவான், கிணறு, ஆறு முதலியவற்றிலிருந்து நீர் இறைப்பான். பாசன வசதிகள் குறைந்தால் பெரும் நஷ்டமும் ஏற்படுவதுமுண்டு ஏனெனில் துருக்கியில் கோடை மழையே பெய்வதில்லை

குடியானவனுக்கு கிராம கூட்டுறவால் நடத்தப்படும் விவசாயசகாய பாங்குகள் பொருளுதவி யளிக்கின்றன. ஆனால் குடியானவர்கள் மிகவும் உழைத்தாலன்றி நிலங்களிலிருந்து ஒருவித பலனும் அடைய முடியாது, உதவியாலும் யாதொரு பிரயோஜனமும் இல்லை.

குடியானவனின் தினசரி வாழ்க்கையும் மனோகரமானது சூரியோதயத்திற்கு சற்றுமுன்பே குடியானவன் தன் தினசரி அலுவல்களை ஒரு கோப்பை சூடான காபி குடித்து ஆரம்பிப்பான் காபியுடன் ரொட்டித்துண்டு ஒன்று, பாலாடை, சில கனிகள் முதலியவற்றையும் உட்கொள்வான். நடுப்பகல் உணவு தன் குடும்பத்துடன் கூடி உண்பான் பெரும்பாலும் இவ்வுணவு தானியரொட்டி, உலர்ந்தபழங்கள், வெந்த மாமிசம் அல்லது கோழிக்குஞ்சு முதலியவற்றைக் கொண்டதே இவற்றில் பால், தயிர் அதிகம் உபயோகிக்கப்படுகிறது. அவன் உபயோகிக்கும் ஆகாராதிகள் தேயிலை, காப்பி, சர்க்கரை தவிர மற்றவை யாவும் அவன் குடிசைக்குச் சமீபம் உற்பத்தியாகும் பொருள்களே என்பது வியக்கத்தக்கதே. மாவு தன் வசம் இல்லாவிடில் மற்றவரிடம் பண்டமாற்றுத்தால் பெற்றுக்கொள்வான். வயல்வெளிகளில் பாயுட சிற்

ருறுகளின் கரைகளில் அநேக மாவரைக்கும் யந்திரங்கள் இயங்கி வருகின்றன. ஆடுகளால் பாலும், மாமிசமும் பெறுவான். கோழிகளிக்கோ குறைவேயில்லை.

அறுவடையானதும் தானியங்களை மண்டிகளுக்கனுப்பி, அதனால் கிடைக்கும் பணத்தைக்கொண்டு ஓர் விருந்து வைப்பான். விருந்தின்போது ஓர் ஆடு அறுத்து மாமிச ஆகாராதிகளுடன் திராட்சை மது உட்கொண்டு, சுற்றுப்புறத்து நிலங்களில் வேலை செய்யும் ஆட்களுடன் உல்லாசமாய் கொண்டாடுவான் விருந்து முடிந்ததும் குடியானவன் தன் குடும்பத்துடன் வயலைவிட்டு தன் சொந்தவீட்டிற்குப் போய் குளிர்காலத்தைக் கழிப்பான். குளிர்காலத்திற்குத் தேவையான கால்நடைத் தீவனம், குடும்பத்திற்கு தேயிலை, காப்பி, சர்க்கரை, மாவு முதலியவற்றை சேகரஞ்செய்து வைப்பான். சந்தர்ப்பம் கிடைத்தால் குளிர்காலத்திலும் ஏதாவதொரு தொழிலை மேற்கொள்வான் இல்லாவிடில் பாலாடை தயார் செய்வதே அவனது பொழுதுபோக்காகும்.

பொதுவாக துருக்கி விவசாயிகளின் பொருளாதார நிலைமை மிக நன்றாயுள்ளது. ஆகவே விவசாயி தன் வாழ்க்கையில் பெருமைகொண்டுள்ளான்.

# பலஸ்தீன்.

## ஷா அப்துல்லா துரோகம்.

டிரான்ஸ் ஜோர்தான். பலஸ்தீன் (அரபு) இணைப்பு ஷா அப்துல்லாவின் துரோகமும், இஸ்லாமின் புனித பெயரால் பல்லாயிரக்கணக்கில் பலியாகி போராடிய அரபு வீரர்களின் நோக்கத்தின் துக்ககரமான முடிவு மட்டுமல்லா, அவருடைய பிதா ஷரீபே மக்காவின் பித்தலாட்டங்களை நினைவூட்டும் சம்பவமேயாகும். உஸ்மானியர்களை எதிர்த்தால் சுதந்திர அரபு நாட்டின் அதிபதியாகலாம் என்று பிரிட்டிஷார் ஆசைகாட்டியதும் ஷரீப் துரோகமிழைக்க முற்பட்டு ஹிட்ஜாஸ் துருக்கி ராணுவத்தையும் வெளியேற்றி விட்டான்.

ஒரு நாட்டின் கெட்டகாலம் வந்துவிட்டால் பலமற்ற ஒரு சிறு எதிரியும் அதை முறியடித்து விடுவான். உஸ்மானிய வீரர்கள் ஷரீபின் துரோக வலையில் சிக்கிக்கொண்டார்கள். பால்கன் யுத்தம், மஹா யுத்தம் முதலியவற்றால், மத்தியதரைக்கடல் தீவுகளான கிரீட், சைப்ரஸ், மால்டா முதலியவற்றை இழந்த துருக்கி காலப்போக்கில், பக்தாத், சிரியா, லெபனான், பலஸ்தீன் முதல் மோசில் வரையுள்ள பிரதேசம முதலியவற்றையும் இழந்துவிட்டது. பால்கன் நாடுகளும் சுதந்திரம் பெற்றுவிட்டன. சிரிய ஆசியாவும் சிதறிவிட்டது. முடிவை முன்கூட்டியே அறிந்திருந்தால் "சுதந்திர அரபுநாடு" என்ற வெள்ளையரின் வலையில் சிக்காது, சிதறிவரும் துருக்கி சாம்ராஜ்யத்தை நிலைநிறுத்த அரபுகள் போராடியிருப்பர் அந்தோ! அறிவிழந்த அரபுகள் மீண்டும் சுய அறிவு பெறவில்லை.

சமூக துரோகி ஷரீப் இன்று இல்லை; ஆனால் அவன்மகன் அப்துல்லா சாபக்கேடாய் திகழ்கிறார். ஷரீப் பரம்பரையினரின் துரோகங்களில் எஞ்சியிருந்தவற்றை அவன புதல்வர் பூர்த்திசெய்கிறார்.

யூத சாம்ராஜ்யக் கனவை நினைவாக்கப்பட்டது 15 மே 1948 அரேபிய தீபகர்ப்ப சரித்திரத்திலேயே ஒரு கெட்டசகுன நாளாகும். இஸ்லாமிய நாகரீகம், கலாச்சாரம் முதலிய பிரகாசத்தை அள்ளி வீசிய பலஸ்தீன் பூரண சந்திரன், பிரிட்டிஷ் அமெரிக்க வெள்ளையரின் துரோகத்தாலும், டிரான்ஸ் ஜோர்தான் மன்னனின் சமூக துரோகத்தாலும், அஸ்தமித்துவிட்டது! யூதபடைகள் பூரண தோல்வியடையும் தருவாயில் அப்துல்லாவின் பன்னிருஆயிரம் துருப்பினர் யுத்த அரங்கத்தை விட்டு வெளியேறிவிடுவர் என்று யார் அறிந்திருப்பர்?

பலஸ்தீன் போராட்ட காலத்திலேயே அப்துல்லாவின் துரோக எண்ணத்தை அம்பலமாக்கும் பல சம்பவங்கள் நிகழ்ந்தன வாயினும், இடைக்கால அரபு பலஸ்தீன் நாடு முப்தி அமீனுல் ஹுசைனியின் தலைமையில் ஏற்பட்டு, புனித யுத்தத்தில் பலதியாகங்கள் புரிந்த வீரர்கள் அதை ஏற்றுக்கொண்டபோது, டிரான்ஸ் ஜோர்தான் சர்க்கார்மட்டும் அதை அங்கீகரிக்காத போது அப்துல்லாவின் துரோக எண்ணம் சந்தேகமற புலனாகிவிட்டது, மற்ற எல்லா அரபு நாடுகளும் இன்றுவரை இடைக்கால சர்க்காரையே அரபு பலஸ்தீன் அரசாங்கமென மதிக்கின்றன.

19 எப் 50-ல் நடைபெற்ற அரபுலீக் கூட்டத்தின் "ஐக்கிய பாதுகாப்பு" தீர்மானத்திற்கு சில நாட்களுக்குப்பின் அதாவது 24 எப்- 50-ல் டிரான்ஸ் ஜோர்தானுடன், அரபு பலஸ்தீனை இணைத்துக்கொண்டது ஷரீப் வமிசத்தவர்களின் துரோகங்கள் யாவற்றிற்கும் சிகரமெனலாம். மற்ற நாடுகளுடன் ஆலோசிப்பதும் அவசியமென அப்துல்லா நினைக்கவில்லை, தன்நாட்டு பார்லிமெண்டின் பிரதிநிதிகளான பலஸ்தீனர்களுக்கும் பிரதிநிதித்துவ உரிமை அளிக்கவில்லை என்பது எல்லைகடந்த துரோகமே.

ஷா அப்துல்லா ஒரு பெரும் சமூகதுரோகியாயினும், பொதுவாக அரபுநாடுகளையும் குறிப்பாய்

# பிஜ்லி அவர்களின் இலங்கைப் பயணம்.

'ஆஸாத்' பிரசார வேலையாக A. K. பிஜ்லி ஸாஹிப் அவர்களும், ஆஸாத் ஆசிரியர் அவர்களும் மே-மாதம் இலங்கை சென்ருர்கள் இலங்கைப் பயணத்தின்போது அவர்கள் ஹாஜி முஹம்மது காஸிம் A. K. M அப்துல்காதர், A. E. M முகம்மது யூசுப் முதலிய பெரும் பிரமுகர்களுடைய விருந்தாளிகளாக இருந்தனர். இந்தியருக்கும், இலங்கையர்க்கும் என்றே தலைசிறந்த ஒரு தனிப் பண்பாடு என்னவென்ருல் விருந்தினரை வரவேற்று, பணிவு தணிவுடன் அவர்களை உபசரிப்பதுதான் படர்ந்து வளரக் கொழு கொம்பில்லாத முல்லைக் கொடியினுக்குப் பரிந்து ரதத்தைப் பிரிந்துசென்ற பாரி வள்ளல், பைங்நாகப் பாம்பு கடிக்கபையன் இறந்துவிட்டான்என்னும்செய்திதெரிந்தால் அமுதுண்ணும் அப்பர்பிரான் அமுது நீப்பர் என்று ஐயுற்று, அச்செய்தியை அடக்கிவிட்ட அப்பூதி அடிகள் முதலிய வள்ளலார் தோன்றிய இந்திய வள நாட்டின் வழிதோன்றல்களாகிய பேற்கூறிய பெருமக்கள் அன்புடனும்,பிரியமுடனும் தம விருந்தினரை உபசரித்தனர். "தாயகத்தைப்பற்றிய சிந்தனை எங்களுக்கு அறவே இல்லை. வீட்டிப்பிரிந்து, பிறிதொரு இடத்தில் இருக்கிரும் என்ற எண்ணம் இருந்தால் தானே!" என்கிருர் ஆஸாத் ஆசிரியர். இலங்கைப் பயணம் பற்றி நான் அவரை "குசலப் பிரச்னம் கேட்டபொழுது.

A E M. முகம்மது யூசுபு அவர்கள் மாளிகையில் நடந்த ஒரு பெரு விருந்தில் இலங்கைப் பிரமுகர்கள் பலர் அழைக்கப்பட்டிருந்தனர் ஸிலோன்மேயர், ஸிலோன் காங்கிரஸ் கமிட்டியின் சென்ற பிரஸிடெண்ட், பார்லிமெண்ட் மெம்பர் அப்துல் அஜீஸ் A. K M. அப்துல்காதர், ஷேக் இப்ராஹீம், முத்து வாப்பா, மிஸ்டர் ராகவன், பாக் ஹை கமிஷனர், ஸாஹிரா கல்லூரித்தலைவர், இவர்களும் இவர்போன்ற இன்ன பிரமுகர்கள் பலரும், அந்த விருந்தில் கலந்து கொண்டனர்.

ஆங்கிலத்தில் A K பிஜ்லி அவர்கள் ஒரு மணி நேரம் உயர்ந்த சொற்பொழிவொன்று ஆற்றினர். இந்தியப்பிரிவினையையும், அதன் பயன்களையும் விளைவுகளையும் சுட்டிக்காட்டி, அதையே தீமையின் மேற்கோளாகக்கண்டு, இலங்கைப் பிரிவினையை தடுக்கும் வழியில் மக்கள் முயலவேண்டும். என்று அவர் அழுத்திக் கூறினர்.

தேசிய நோக்கங்கள் பற்றிய அவருடைய திறம் படைத்த பேச்சு வாதங்கள் காலேஜிலும், ரோட்டரி கிளப்பிலும் நன்ருகப் புகழப்பட்டனவாம். ஸிலோன் வாசிகள் அடைந்த ஆச்சரியம் அளவிடுதற்கில்லை. அது நிற்க, "இலங்கை சென்றுவந்தீரே அந்த இந்தியரின் நிலைமை எப்படியென்று கூருது, நீள நெடுக

---

அரபு லீகையும் விரோதித்துக்கொள்ளவில்லை. இவ்வித போக்கின் உட்கருத்து என்னவென்று தெரியவில்லை. அரபு நாடுகளை வெறுக்கிருர் என்ற குற்றச் சாட்டுக்கள் யாவற்றையும் பலமாய் எதிர்த்து வருகிருர். இன்றும் எவ்வித துரோக எண்ணத்தைக் கொண்டிருக்கிருரோ! சில அபுநாடுகளை ஜோர்தானுடன் இணைக்க விரும்புவதாய் வதந்தி உலவுகிறது அரபு லீகின சமீபத்திய கூட்டம் ஒத்திப்போடப்பட்டதற்கு ஆண்டு விழாதான் காரணம் என்று கூறப்பட்டாலும் இராக், ஜோர்தானின் நடவடிக்கையைக் குறை கூற விரும்பாததும் ஒன்று என்று கூறப்படுகிறது. 'இவ்விணைப்பு அரபு நாடுகளின் ஐக்கிய தீர்மானத்தை பாதிக்காது; இதனுல் அரபுகள் பாதுகாப்புக்கு வழி ஏற்படும்" என்று ஷா அப்துல்லா கூறியது, யூதர்களைப்போல் மற்ற அரபு நாடுகளும் பொருளாதார பகிஷ்காரத்தை ஆரம்பித்துவிடுவர் என்றபயத்தினலேயே என்றுநப்பப்படுகிறது அரபு லீக் நிறைவேற்றிய தீர்மானத்தை ஷா அறிவார். யூதர்களுடன் இருந்த பொருளாதார உறவோ முறிந்துவிட்டது அதனுல் ஜோர்தானுக்கு எவ்வித நஷ்டமுமில்லை; அபாயம் அரபு லீகுக்கே என்று ஷா கூறிவரினும், அவர் அரபுலீக் உறவைவிட விரும்பவில்லை என்றே தோன்றுகிறது.

பிரிட்டிஷார், ஜோர்தானுடன் கொண்டுள்ள உறவு காரணமற்றதல்ல; அவர்கள் விரும்பும் முக்கியமான பொருள் எண்ணை அங்கேயிருப்பதே. உஷா செய்யும் தந்திரங்களால் சில அரபு நாடுகளும் அவர் வலையில் சிக்கிவிடும் என்றபயமும் உண்டாயிருக்கிறது அவ்விதமானுல் கம்யூனிஸ்டுகளை எதிர்க்கும் ஒரு கருவியாக அவை உபயோகப்படும். அமெரிக்காவும் இதை வரவேற்கிறது. பாலஸ்தீன் இணைப்பை அச்சீஸனும் தெளிவாய் அங்கீகரித்துள்ளார் ஏதோ ஒரு காரணத்தினுல் யூத, அரபு பலஸ்தீன் எல்லையையும், ஜெருசலேம் நகர விஷயத்தையும் பிரிட்டன் தீர்மானிக்கவில்லை, கூடிய மட்டிலும் தன் நோக்கத்தை ஜோர்தானில் அடைய பிரிட்டன் விரும்புகிறது என்று தோன்றுகிறது

அரபு நாடுகளில் எகிப்துக்கு நல்ல செல்வாக்கு உண்டு ஆகவே அதன் தலையீட்டால் நல்ல பலன்கள் உண்டாகும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. எகிப்திய பிரதமர் முஸ்தபாநஹாஸ் பாஷா சிறந்த ராஜதந்திரி. அவர் அமெரிக்கா, பிரிட்டன். அவற்றின் கையாளான ஷா அப்துல்லாவை வெறுப்பது மட்டுமல்ல, "பிரிட்டன் - அமெரிக்கா மட்டுமல்ல வேறொரு வல்லரசு (ரஷ்யா) டனும் நாம் ஒத்துழைக்க முடியும்" என்று கூறியுள்ளார்.

வனைத்துப்பேசுவதில் பலன் என்ன? என்ற கேள்வி எழுவது இயற்கையே.

இலங்கை அரசாங்கத்தைப்பற்றி நாம் கண்டனங்கள் ஒன்றும் நாம் எழுதப் போவதில்லை. அப்படி எழுதினாலும் அது புதிதில்லை தான். ஆனால் அடக்குமுறைக்கும் அடங்கா ஆற்றலும், தொழில் திறனும், தீர்ந்த, கூர்மையான அறிவு நோக்கம் படைத்த இந்திய மக்கள், ஆயிரமாயிரம் இன்னல்களையும் தாண்டி பிரகாசிக்கின்றனர். வியாபாரத்துறையிலும் சரி, கல்வி கேள்விபோன்ற, படிப்புத்துறையிலும் சரி, அரசியலிலும் சரி, இன்னும் இதுபோன்று மானிடவாழ்க்கைக்கு இன்றியமையாதமற்றைய எந்தத்துறையிலும், இந்தியரே தலைசிறந்து நிற்கின்றனர். சுருங்கக் கூறுவோமானால் ஸிலோன் நகரத்தின் இன்றைய எழுச்சிக்கும் இந்த எழுச்சியின் நீட்சி பெற்ற வாழ்விற்கும் அவர்களே ஊன்றுகோல் ஆவர்; அடிப்படை ஆவர்; குறள் வாக்கிய மொன்றினால் மட்டும் நாம் சுருங்கக் கூறலாம். "எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம், உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு"

வருந்தத்தக்க மற்றவொருசெய்தி என்னவெனில் முஸ்லிம் லீக் இலங்கையில் அதிக பலங்கொண்டதாக இருப்பதே முகம்மதியரிடையே, எழுத முடியாத அளவிலே ஏதோ ஒரு காரணமானது, கண்மூடித்தனமாக அவர்களை அதை நம்புமாறு செய்கிறது. முஸ்லிம் லீக் கட்சி, எத்துறையில் சேர்ந்தது, அதன் முழுமுதற் கொள்கையென்ன, அது விழையும் முடிவென்ன என்பதெல்லாம் சமீபகாலமாக இந்தியா மூலம் பிறநாடுகள் அறிந்துகொள்ள வேண்டியவை மிகச் சிறிய அளவிலே அறிவுடைய மக்கள்கூட இதை கண்கூடாகக் கண்டு மயக்கம் தீரப்பெற்றன. இலங்கை முஸ்லிம்களும் இத்தகையமுறையில் தங்கள் நோக்கைச், செலுத்தவேண்டும் என்பதே நம் கோரிக்கை.

# செய்திகள்.

## மல்லிப்பட்டிணம்.

ஸ்ரீ வி. நாடிமுத்துப் பிள்ளை மெ. பா கடற்கரையோர கிராமங்களுக்கெல்லாம் சுற்றுப் பிரயாணம் சென்றார்கள் பலகிராமங்களில் வரவேற்புப் பத்திரங்கள் வாசித்துக் கொடுக்கப்பட்டன புதுப்பட்டிணம், மல்லிப்பட்டிணம் முதலிய இடங்களில் பிரமாதமான கூட்டங்கள் குழுமி அவர்களுடைய சொற்பொழிவை கவனமாகக் கேட்டனர். அவருடன் R. M கோவிந்தசாமி செட்டியார், இப்ருஹீம், R. வரதராஜுலு, சின்னத்தம்பி, ஆஸாத் ஆசிரியர் முதலியோரும் இன்னும் பல ஊழியர்களும் இருந்தார்கள். அவர்களுக்கு அளிக்கப்பட்ட வரவேற்புப்பத்திரத்தில், அங்கு இருக்கும் மீன் பிடி தொழிலாளர்கள், "முஸ்லீம்கள் பாகிஸ்தானில் சேரவேண்டும்" என்று சமீப காலமாக நடந்துவரும் புதுவித பிரசாரத்திற்கு தமாருக திருத்தும் முறையில் சொற்பொழிவுகள் செய்யவேண்டும் என்று வேண்டிக்கொண்டனர். அந்த சூழ்நிலையில் திருத்திய மனப்பான்மையை புகுத்த ஆஸாத் ஆசிரியர் ஒரு நீண்ட சொற்பொழிவு ஆற்றினார் பின் தஞ்சை மாவட்டாட்சி தலைவர் நாடிமுத்துப் பிள்ளையவர்கள் அவர்க்கென்று விமரிசையாக அலங்கரிக்கப்பட்ட மேடையின் மீதேறி, ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமை, காந்திஜியின் போற்றற்குரிய சகோதரத்வ சித்தாந்தம், தென்னிந்தியாவில் வகுப்புவாதமில்லாமல் இருக்கும் நிலை முதலியனபற்றி முக்கியமாக குறிப்பிட்டுப் பாராட்டினார். அவருடைய உருக்கமானபிரசங்கம் துவேஷ மனப்பான்மையை துடைத்தெரிந்து ஒற்றுமை மனப்பான்மையை நிலைநாட்டியது. அங்கே அவருடைய செல்வாக்கின்றி மற்றெதுவும் மற்றய யாரும் அந்த வெறுப்பு சூழ்நிலையில் வெற்றிகாண்பதற்கில்லை.

## புதுப்பட்டிணம்.

மல்லிப்பட்டணத்தின் எதிரொலி புதுப்பட்டிணத்திலும் பரவலாம் எனக் கவலைகொண்டனர் இங்குள்ள முஸ்லிம்கள். அவர்கள் சென்ற தேர்தலில் தாங்கள் நடந்துக்கொண்டவிதம்பற்றி வெட்கமடைந்திருப்பினும் பிள்ளையவர்கள் பெருந்தன்மையுடன் அவர்களுடைய அச்சம்தவிர்த்து சுமுகமான நிலையை ஏற்படுத்தினர்.

ஆஸாத் ஆசிரியர் பேசுகையில் மீன் பிடி தொழிலின் முக்யத்வம் பற்றி விளக்கினார். தென்னிந்திய அரசாங்கம் கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவிட்டு $1\frac{1}{4}$ லட்சம் கிணறுகள் வெட்டி லட்சக் கணக்கான ஏகராவுக்கு மேல் சாகுபடிக்கு கொண்டு வந்த போதிலும் வருடத்தில் $1\frac{1}{4}$ லட்சம் டன் தானியம் அதிக உற்பத்தி செய்யமுடியவில்லை. ஆகவே ஜப்பான் கானடா, நார்வே, அமெரிக்காவைப்போல மீன் பிடி தொழிலுக்கான கல்லூரிகளும் தொழிற்சாலைகளும் ஏற்படுத்தி இத்தொழில் அபிவிருத்தி யடையும்படி செய்யவேண்டும் இதற்கென ஒரு தனி மந்திரியை ஏற்படுத்தி கவனித்தால் ஏறக்குறைய ஒரு நாளைக்கு $1\frac{1}{2}$ லட்சம் டன் ஸகல சக்திகளுங்கொண்ட ஆரோக்யமான உணவுச் சாமான்கள் பெறலாம். தெய்வத்தின் கடாட்சம் கடல் ரூபத்தில் அரசாங்கத்தின்முன் அலையடித்துக்கொண்டிருந்த போதிலும் அரசாங்கம் அதைப் பயன்படுத்திக்கொள்ளவில்லை என்பது வருத்தமே என்றும் அவர் குறிப்பிட்டார்.

## வாக்குமூலத்தில் மரணம்.

A. K. பிஜ்லியும், ஆஸாத் ஆசிரியரும் இலங்கை சென்றிருந்த சமயம் ஆஸாத் ஆசிரியர் குழந்தை ஷபீ

குர் ரஹ்மான் சில சொட்டு மண்ணெண்ணெய் குடித்துவிட்டான். குடித்தவுடன் அதை உமிழ்ந்துவிட்டபோதிலும், குழந்தையானதால் குதித்து ஓடிச் சென்று தாயிடம் விஷயத்தைத் தெரிவித்தான். தாய் (பாவம். பேதை) என்ன நேருமோ என்று பயந்து நடுங்கி ஆஸ்பத்திரிக்கு தூக்கிச் செல்ல, தேர்ந்து திறம்பெற்ற டாக்டர் பாஷாணம் தின்றதாக அவனுக்குப் பெரிய வைத்தியம் செய்ய முற்பட்டார். சின்னஞ் சிறிய இந்த காரியத்தின் பெத்தப் பெருத்தவிளைவு குழந்தையின் மரணமே.

பாவம் மண்ணெண்ணெயினால் மரணம் சம்பவிக்கவில்லை. குழந்தையின் வாக்குமூலத்தால்தான்!

## கிழக்கு வங்க கலகங்களின் எதிரொலி.

ஷாஜஹான்பூரில் நடந்த கலகங்களை யொட்டி உ. பி. பிரதமர் சொன்ன வாக்கியம் கேயர்களுக்கு நினைவிருக்கும். "மானிட வர்க்கத்தின் பேரில் இதைவிடக் கொடுமையான சம்பவம் எதுவும் இதுவரை இழைக்கப்படவில்லை" என்று அவர்கள் குறிப்பிட்டார். ஷாஜஹான்பூர், ஜோத்பூர் பக்கத்தில் பாகிஸ்தான் செல்லத் தயாராக தங்கியிருந்த பல்லாயிரம் முஸ்லிம்களை திருப்பியழைத்துவர, ஹிந்து முஸ்லிம் தூது கோஷ்டி, ஜமியத்துலாமா தொண்டர் தூது போய் பாகிஸ்தான் எல்லையில் தங்கியுள்ள முஸ்லிம்களை திருப்பியனுப்பி கொண்டுள்ளனர். அலிகட்டிலிருந்து சென்ற முஸ்லிம்களுக்காக இந்து பிரமுகர்கள் தூது கோஷ்டி அலிகட்டிற்கு சென்று அங்கிருந்து 2000 முஸ்லிம்களை திருப்பிவிட்டிருக்கிறது. ஏனைய முயற்சிகள் எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கின்றன.

இவை யாவும் நேரு-லியாகத் ஒப்பந்தத்தின் பயன் என்பது குறிப்பிடத் தக்கது.

---

# கிசான் - காந்தி

—( K. R. பசுபதி, கரூர் )—

"கழனிகளின் வரம்புகளிலெல்லாம் முத்துக்களும், தாவிப்பாயும் மதகுகளெல்லாம் சங்குகள், எருமை வீழ்ந்து துளையும் நீர்க்குழிகளிலெல்லாம் செங்கழுநீர் மலர்க்குவியல்களும், பசுபடித்து சமமாக்கிக் கிடக்கின்ற இடங்களிலெல்லாம் பவளங்கள், செந்நெற் பயிருள்ள பரந்த இடங்களிலெல்லாம் அன்னப்பறவைகளும், பக்கங்களிலுள்ள கரும்புகளிலெல்லாம் செந்நிறத்தேனும், அழகிய சோலைகளிலெல்லாம், தேனுண்டு மயங்கிய வண்டுகள் கூட்டமும் சூழ்ந்து சோபனம் தவழ்ந்தது தாய்த்திருநாட்டில், ஓர் காலத்தில்."

தாளத்தொலியும், பேளத்தொலியும், காளத்தொலியும் மங்கும் அளவிற்கு உழவர்களின் களிப்பு ஒலிஓங்கி, இப்பாரதம் முழுதும் நிறைந்து துளும்பியதுண்டு!

"செங்காலன்னப்பறவைகள், தமது குஞ்சுகளைக் கொஞ்சிக்குலாவி, பஞ்சணையைவிட மெல்லியதான தாமரைப் படுக்கையில் தவழவிட்டு, தவளை தாலாட்ட களிப்புக் குளத்தில் நீந்தும்," என, நீர்வளம் குறித்து நல்லபாட்டு தோன்றிய நாடு இதுதான்

"நீர்க்குழிகளிலே நீந்திய நாட்டெருமைகள், கரையேறிடும்போது சிறு, சிறு மேகத்துண்டங்கள் போலக் காட்சியளித்துப் பின்னர் அவை தம் கன்றுகளை நினைத்த அளவிற்குப் பால்சுரந்து, ஓடையாக மாறி, பக்கத்தில் உள்ள மரகதப்பச்சையை மேலாக்காகப் போர்த்துள்ள மாநில மடந்தைமீதுப் பாய்ந்து பசுமையின்னும் கூடிக் கண்ணுக்கு விருந்தளிக்க, வளம் நிரம்பிய நாடாக இருந்தது நம் மாத்ருபூமி!

"ஒருபக்கம் நெல் மலைக்குவியல்! மறுபக்கம் பவளக்குவியல்! ஒருபுறம் முத்துக்குவியல்! மறுபுறம் கனகக்குவியல்! மற்றோர்புறம் மணிமலை! எனச் செல்வச்செழுமை கூடிக்குலாவிய நாடு என கவிவாணர் பாராட்டிய பூமியிது!

பச்சைப் பட்டாடை யுடுத்துப் பூமடைந்தைக் காட்சிதர, மக்களின் உதடுகள் தென்றல்வீச, கண்கள் தேன்சிந்த, உள்ளம் ஏற்பாட்டை முழங்க, கலப்பை ஒலியோடு கலந்து இன்ப ஊஞ்சலாடி வாழ்ந்தனர் இந்தநாட்டு உழவர்கள்!

மந்திரம் பாராட்ட, சுற்றம் சீராட்ட, நட்பு தாலாட்ட, கொற்றம் நீதித் தேரோட்ட உழவர் கொடிக் குதூகலமுடன் பறந்தது இந்திய துணைக் கண்டத்திலே!

சோபிதம் நிறைந்து- சோபனகீதம் நிறைந்து, சாசுவதான இன்பம் நிறைந்து, சோகம் மறைந்து, பாரதத்தைச் சுந்தரச்சோலை வனமாக்கி, சந்தனச் சோலையிலே சந்தக்கவிகளைப் பொன் வண்டெனச் சுழலவிட்டு, மாங்கிளையேறி, மணிக்கால் பற்றிப் பூங்கிளிகள் பேசக் குதூகலம் நிரப்பிய உழவர்குலம் நிரப்பிய நாடு இது!

இவ்வளவு சிறந்த உழவர் வாழ்வு இன்று எப்படியுள்ளது? மங்கல ஓசை பொங்கிக்கிடந்த நாட்டிலே மங்கிய ஓசையும். மங்கிய முகமும், தொங்கிய தலையும் காட்சியளிப்பதேன்? வயிரம்பாய்ந்த தோள்கள் வலிவிழப்பதேன்?

பிரசித்திபெற்ற உழவன், பரிதாபத்திற்குரிய பாட்டாளியாக மாறியதேன்? வசந்தம் நிரம்பிய

வயல் வள்ளல்களின் வாழ்விலே வெங்கோடை புகுந்ததேன்?

குறிப்பாக விவசாய நாட்டிலே, கிராமங்களான விவசாய க்ஷேத்திரங்களிலே, ஆத்திரமும், அவலமும் வளைந்து, வளைந்து வருவதைக் காண்கின்றோம்.

ஏட்டிலே, பாட்டிலே, பாராட்டப்படும் உழவன், நாட்டிலே இன்று நல்ல நிலைமையிலே இருப்பதாகக் காணவில்லை!

விருந்திலே முத்தையும், பொன்னையும் வைத்து இசைபெற்ற வயல்வள்ளல்கள். இன்று வாடிவதங்கு வதையும், தங்கம் தானமிட்ட திலகங்கள், தகரக் குவளைகள் ஏந்துவதையும் காண்கின்றோம்!

இந்த, மந்த, மங்கி, மாளும் நிலை உலக சிந்தனையாளர்களைக் கவரத்தான் செய்தது!

வயல்வாட, பயிர்வாட, உழவன் காட்டுப்புறத்தைவிட்டு, நகர்ப்புறத்தை நாட, கவலைகள்கூடக் காரணத்தைக் களைந்தெறிய வேண்டாமா? இதற்கு உலகப்பெரியார்கள் காட்டிய பாதை என்ன?

பறவைகள் கூடுகளில் ஏதங்க, காடு கறுக்க, கட்டாந்தரையாகப் பாளம் பாளமாகப் பிளவுபட்டுக் கிடக்கும் வண்ணமிழந்த நிலத்தையும், பயிர்கள்வாடக் கண்டும் கண்கள் கேணியாக மாறியது பலருக்கு!

"வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்" என வடலூர் வள்ளலின் நெஞ்சம் துன்ப வேதனையால் துள்ளுகின்றது! துவள்கின்றது! தேய்கின்றது!

உழவன் நெஞ்சிலே புயல்! வயல்களிலே வாட்டம்! இது இன்றைய துன்ப வடிவம்!

"உழவுக்கு" முதலிடம் தந்து, "உழவுக்கும், தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" என்று பாரதி ஏட்டில் காண்கிறோம்! ஆனால் "என்னோடு போகட்டும், இந்த உழவுப் பிழைப்பு" என்ற ஒலி, இன்று, சாய்ந்துகிடக்கும் சுவற்றிலே, சரியாக வேயப்படாத கூரையின் அடியிலே, கஞ்சிக்கழும் உழவர்களின் அடிவயிற்றிலிருந்து, அக்னிவயிற்றையும் தாண்டி, நெஞ்செறியச்செய்து, நாக்கைச் சூடாக்கிச் சிதறுகின்றது! இந்தக்கனல்பட்டுக் கருகிக் கிடப்பது போலக்கிடக்கின்றது சட்டியும் சாலையோர வயலும்!

"வரப்புயரக் கோனுயரும்" என்று மொழிந்தாள் ஔவை! இன்று வரப்பு உயரவில்லை! ஆனால் வரட்சி உயர்கின்றது! கோன் உயரவில்லை! ஆனால் புரட்சி உயர்கின்றது!

இந்த நிலை முதலில், மகாத்மா ராமலிங்கத்தைக் கவர்ந்தது பிறகு, மார்க்ஸையும், மகாத்மா காந்தியடிகளையும் கவர்ந்தது! கவர்ந்து கவலைக்கூண்டிலே, சிந்தனையின் நிழல்களிலே அமர்ந்து பாதையைக் கண்டு பிடித்தனர்!

உலக சர்வகலாசாலையில், மகாத்மாவின் மனம் படிந்தது. சரியான சிந்தனையெனும் ஆராய்ச்சிக்கூடத்திலே ஆராய்ந்து முடிவைக் கண்டார்!

நாட்டில் நவகாளிகள் நடக்க, பீகாரிலே படுகொலைகள் நடக்க, பாஞ்சாலத்திலே, ரத்தத்தடாகத்திலே தலைகள் மிதக்க, ஆங்காங்கு அலகைகள் ஆட, நாயும், நரியும், கழுகுகளும் சாந்தி முழங்கும் வேளையிலே: மகாத்மா காந்தியடிகள், "உழுபவனுக்கே நிலம் சொந்தம்" என்றார்.

கேட்பாரற்றுக்கிடந்த கிசான், காந்தியடிகளின் தோழனாக மாறிவிட்டான்!

சிம்மாசனமுண்டா என ஏங்கிய வயல்வீரனின் செவியிலே, காந்தியின் சங்கநாதம் பாய்ந்தது, பசுந்தேனென!

ஆலைச்சங்கலற, உள்ளம் ஓலமிட, இயந்திரத்தின் முன்னமர்ந்த இயந்திரமாகவே மாறி, உளம் நைந்து வளங்குன்றி, கிராப்தலை, காலர் ஷர்ட், காலி ஜேபியுடன் காட்சியளிக்கும் தொழிலாளருடையதும்,

பின்னிடும் கால்களும், பிசைகின்ற கைகளும், பசிக்கின்ற வயிறும்கூடி, சாந்தி, சாதம், சிறுவீடு இவைகளற்று, உடைந்த கலப்பையும், ஒட்டிப்போன மாடும், கடனுகப் பெற்றுக் கூலிக்குழைக்கும் உழவனுடையதுமான,

இந்த இருவர்களும் அடங்கிய ஆட்சி ஏற்பட வேண்டும் என்றார் காந்தியடிகள்!

"கிசான் மஸ்தூர் பிரஜா ராஜ்" கேட்டார் காந்தியடிகள்!

குளம் கண்டு, குளத்தில் குவளை கண்டு, வயலிலே வளம் கண்டு. உளம் இன்பம் கண்டு, தேசம் சிறப்பு கண்டு இருந்ததையும், இன்று வளங்குன்றி, உளம் துன்பக்குளமாக, கையில் குவளையேந்தி, உளைச்சலுறும் உழவனையும், பகுத்துப் பார்த்துப் பாரதப் பழஞ்சிறப்பை, இழந்த தனத்தை மீட்டும் எய்த "உழுபவனுக்கே நிலஞ் சொந்தம்" என ஊதினார் கொம்பு!

"உழுபவனுக்கே நிலம் சொந்தம்". கிசானுக்கு காந்தி தீட்டிய மகாசாசனம் இதுதான்!

உலக மகாமேதைகளான மணிமகுடத்தில், மகாத்மா மணியில் வீசும் சுடர்களில் ஒன்றே, "உழுபவனுக்கு நிலம் சொந்தம்!"

இன்றைய இந்திய சோஷலிஸ்ட் சிற்பி எனப் பெயர்பெற்ற ஜெயப்பிரகாஷ், தேசாபிமானங் கொண்ட உன்னதத் தியாகியாவரர். அவர்கூட 'நான் காணும் சோஷலிசத்தில் தனிச் சொத்துரிமைக்கு அனுமதி யளித்துள்ளார்! குறைந்தபக்ஷ அளவு நிலம் வைத்துக்கொள்ளலாம். என நிர்ணயம் செய்துள்ளார்! ஆகவே, இவர்களால் உழவனுக்கு

முழுவிமோசனம் கிட்டாது. இவர்கள் "உழுபவனுக்கு நிலம் சொந்தம்" என்று காந்திய மந்திரத்தை கையாளுவது, வாய்ப்பந்தல் அல்லது தேர்தலில் வெற்றி பெற, உழவாளி முன்விடும் மோகனாஸ்திரம், என்பதிலே தவறென்ன?

ஆனால் இந்தியக் கம்யூனிஸ்டுகளோ, சரிவாரம் கேட்கிறார்கள்! இவர்கள் விளைச்சலில் பாதியைக் கேட்கிறார்கள்! இவர்கள் இதைப் பெறுவிட்டால், நாசவேலையை நடத்திவிடுகிறார்கள்! உழைத்தவனுக்கு இல்லையென்றால், உலுத்தனுக்கும் இல்லை! ஊருக்கும் இல்லை! என்பதே இன்றைய கம்யூனிஸ்டுகளின் நிலை.

ஆனால், காந்தியும், காந்தியடிகளின் ராமராஜ்யம் வேண்டும் எனக்கோரும், காந்தீய சோஷலிஸ்டுகள், "உழுபவனுக்கே நிலம் சொந்தம்" என்ற ஒலியை எழுப்புகிறார்கள்!

தனிச் சொத்துரிமையும், குறைந்தபக்ஷ நிலநிர்ணயம் செய்யும் சோஷலிஸ்ட்கள், சரிவாரம் கேட்டு சதியிலிறங்கும் கம்யூனிஸ்ட்கள், "உழவனுக்கே நிலம் சொந்தமெனும் காந்தீய சோஷலிஸ்ட்கள் இம்மூவரில் யார்வேண்டும் சொல் மனமே" என்று கேட்கும் நேரத்திலே, காந்தீய சோஷலிஸ்ட்களின் கழுத்திலேதான் கிசான்களின் கதர்மாலை விழும் என்பதிலே ஐயமென்ன?

இந்த "உழுபவனுக்கே நிலம் சொந்தம்" என்னும் கோஷம் கண்டு, இந்த நாட்டின் பொறுப்புள்ள தலைவர்களுக்குக்கூடக் கிலி பிறந்துள்ளது! கிலி, கிண்டலையும், கண்டனத்தையும் விட்டெறிகின்றது!

மேற்படி கோஷம் இத்தேசத்தின் தோஷம் நீக்க தேசப்பிதாவின் அந்தராத்மா எழுப்பின குரல் என்பதையும் மறந்து, அந்த கோஷத்தின் உண்மையைக்கூற மறந்து, அந்த கோஷத்தை கையாளும் சில வேஷதாரிகளின் தவறை உரைக்க மறந்து "உழுபவனுக்கே, நிலம் சொந்தம் என்றால் "அறுக்கிறவனுக்குக் கதிர் சொந்தமா?" என கேலி பேசக் கடகடவென சிரிப்பெழுப்புவது, காந்தி மகாத்மாவை அவமதிப்பதாகாதா? இனியாவது இந்தமாதிரி மொழியாது, தேசத்தின் சாபத்தீடுபோக, தேசப்பிதாவின் திட்டத்தை நிறைவேற்ற ஆக்கவேலையில், ஊக்கமுடன் உழைக்க வேண்டும். உழுபவனுக்கு நிலம் சொந்தம் என்ற முடிவுக்கு வரவேண்டும். இன்றில்லையானாலும், இன்னும் சில பல ஆண்டுகளிலாவது நாம் இத்தகைய இனிய காட்சியைக் காணத்தான் போகிறோம்.

"உழுபவனுக்கு நிலம் சொந்தம்" என்றால் உழைப்பவனுக்கு ஊதியம் சொந்தம் என்பது மட்டுமல்ல! அது தேவைக்குத் தகுந்த அளவுக்குக் கிடைப்பதுதான்! இந்தமாதிரி, உழுபவனுக்கு நிலம் உரிமையாக்குவதற்கு, உருப்படியான காரியங்கள் சில செய்ய வேண்டியுள்ளது!

முதலில், கிராமங்களின் உழவர்களிடம் தொடர்பு கொண்டு, அவர்களின் சகல இன்ப துன்பங்களிலேயும், அனுதாபத்துடன் பங்கிட்டுக்கொண்டு, இயந்திரச்சாலையில் தேவையான பொருள்களை சிரமமின்றிப் பெற்றுத்தந்து அவர்களின் அனுதாபிகளாகவும், ஆலோசகர்களாகவும் தாய்மொழிக் கல்விதந்து, ஆசிரியர்களாகவும் மாறி, கூட்டுணர்ச்சி யூட்டவேண்டும். சமூகத்தின் அடித்தட்டிலவர்களிருப்பதை உணர்த்தி, அவர்களைக் கூட்டுப்பண்ணை வாழ்வுக்கு ஏற்ற நிலைமையில் மானசீகமான சூழ்நிலை உண்டுபண்ணவேண்டும். அவர்களின் அன்பர்களாக மாறவேண்டும். அதிகாரிகளாக அல்ல!

கிராமப் படம் தயாரிக்கவேண்டும் புதியதாக; ஒவ்வொரு அங்குல நிலமும் பற்றிக் கணக்குக்குறிப்பு இருக்கவேண்டும்! இம்மாதிரி ஒவ்வொரு கிராமத்திலும் செய்யவேண்டும்! இதற்கு இரண்டாண்டு திட்டம் ரொம்பவும் அதிகம்! இந்தமாதிரி கிராமவேலைகளில் ஈடுபட்டுள்ள சங்கத்துப் பெயர்தான் "லோக சேவா சங்கம்!"

இதே மாதிரி குழுவினரையே லெனின், "சோவியத் டெபுடீஸ்" என்கிறார்!

இவர்களையே, சோஷலிஸ்ட்கள், கிஸான் பஞ்சாயத் என்கின்றார்கள்!

இந்த நிலையில், "லோக சேவா சங்கம்" கிராம கிசான்களோடு கிசான்களாக மாறி, கூட்டுப்பண்ணை வாழ்க்கைக்கான தோழமையுணர்ச்சியை ஊட்ட வேண்டும். தாய்மொழிப் பயிற்சியையும் தரவேண்டும். இதைச் செய்யும் வேளையிலே, மிராஸ்களும் மிட்டாக்களும் மூட்டும் காட்டெருமைபோல! கலகம் விளைக்கும்! கற்கால மனிதராகக்கூட மாறும்! ஆனால் நெஞ்சங்கலங்காது, அன்பு, அஹிம்சை, அற்புதமான பிரசாரம், சேவைமூலம் கிராமத்தை ஆகர்ஷணம் செய்ய வேண்டும் லோக சேவா சங்கம்! "எங்கெங்கும் உள்ள லோக சேவா சங்கம்" இத்தகைய சூழ்நிலையை உண்டாக்கின உடன், ஆட்சியாளரை நோக்கி, காந்தியின் மந்திரமான, கிசானின் மகா சாசனமான "உழுபவனுக்கே நிலம் சொந்தம்" என்பதை அமுல் நடத்தும்படி வற்புறுத்த வேண்டும்.

ஆம்; சகலவிதமான பூமியும் மக்கள் சர்க்காரைச் சேர்ந்தது என்பதைச் சட்டபூர்வமாக்கவேண்டும். சர்க்காரும், உழவர்களும் நேரடியாகக் கை குலுக்க வேண்டும். இடையில், சர்வேயர்கள், போலீஸ்கள், சூப்ரவைசர்கள் யாரும் இருக்கக்கூடாது. அவர்களுக்குக் குடியானவர்களிடம் வேலையே இல்லை. கிசான்களின் பிரதிநிதிகளான "லோக சேவா சங்கமே" கிராமத்தின் உழவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்தார்களாக இருப்பார்கள்!

ஆனால், இன்றுள்ள நிலையில், பணக்காரரும், மிராஸ்களும், மிட்டாக்களும் நிரப்பிய சபையே பஞ்சாயத்! இது மக்களின் பிரதிநிதித்வம் பெற்றதல்ல! உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்ற சட்டம் ஏற்பட்டவுடன், மேற்கூறிய நபர்கள் வரமுடியாது. உண்மை நபர்கள் தான் வருவார்கள். ஆகவே பஞ்சாயத் ராஜ்யம் ஏற்பட்டு ஒழுங்காக நடைபெறவேண்டுமானாலும் உழவனுக்கே நிலம்சொந்தமாக்கவேண்டும் கிசான் பஞ்சாயத்துக்கு அல்லது லோக சேவாசங்கத்துக்கு, அல்லது எந்த உழவனுக்கும் நிலத்தை விற்க, வாங்க குத்தகைக்கு விட, அடமானம்வைக்க, போக்கியம் வைக்க உரிமைகிடையாது எனச் சட்டம் இயற்றவேண்டும்,

கூட்டுப்பண்ணை வளம்பெற, அண்டைக் கிராமங்களில் இணைக்க முடிந்தவற்றை இணைத்து, வரப்பை ஒழித்து, சாகுபடிக்கான பரந்த பிரதேசத்தை விஞ்ஞான சாதனங்களால பண்படுத்திப் பயிர்செய்ய வேண்டும். லோக சேவாசங்க மேற்பார்வையில்! அதில விளைவது யாவும் அந்தக் கிராமங்களில் வீதிதோறும், டிப்போ வைத்து, தேவைக்குகந்த அளவில் வழங்கவேண்டும! அந்தநேரத்தில் குடிசைத் தொழில்களையும் வளர்க்கவேண்டும! பாக்கியை, ஆட்சியாளரிடம் கொடுக்க வேண்டும்! சர்க்கார் களஞ்சியங்களிலேயே அவை குவியவேண்டும்! ஆனால் கிராமங்களில் இன்று ஒரு சிலர் வீடுகளிலேயே அம்பாரங்களில் அடங்கிக் கிடக்கின்றன! இந்தநிலை அப்போது இராது!

இந்தமாதிரி பெரும் அளவுக்கு நிலமிழந்து, அந்தத் தொழில் தெரியாது உழலும் நபர்களுக்கு உற்ற உதவியை, அவர்கள் சுயமாக சம்பாதிக்கும் திறமையையூட்டி, அவர்களுக்கு நிலமிழந்ததால் நன்மையே ஏற்பட்டது என்று உணரும்படியாக, சர்க்காரும், கிராமங்களின், மக்களின் பஞ்சாயத்தான "லோக சேவா சங்கம்" உதவவேண்டும். ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு! இந்த நபர்களுக்கு எந்த அளவு உதவி செய்யலாம் என்பதை "லோக சேவா சங்கமே" தீர்மானிக்கவேண்டும்!

ஒரு உழவன் தான் வேலைசெய்யாது, வேறொருவனை வாடகைக் கூலிககமர்த்தி, தான்பெறும் ஊதியத்தில் கூலி தரக்கூடாது!

உழவன். உடல் நலம் சிலகாலம் குன்றிக்கிடந்தால் உழவர்கள் யாவரும் கூட்டாகவும், ஒரு முகமாகவும், அவனுடைய வேலையையும் சேர்த்துச்செய்து ஊதியத்தை, நலிவுற்றவனுக்குக் கொடுத்து உதவவேண்டும்!

வயதாகிவிட்டதாலோ, நலிவாலோ உழ முடியாதவருக்கு நிலத்தின்மீது உரிமையில்லை. ஆனால் வாழத் தேவையானதை மக்கள் சர்க்கார், லோக சேவா சங்க மூலம் கொடுத்துக் காப்பாற்றவேண்டும்!

கிராமத்துக்கு கொடுத்தும் கிராமக் களஞ்சியத்துக்கும் போக, சர்க்காருக்குக் கொடுத்தப் பகுதி தானியத்திற்குவரும் ஊதியம் 'நில ஊதியம்' (Land Fund) அவ்வப்போது கிராம மக்களின் வளர்ச்சி மக்கள் பெருக்கு, வாசகசாலை வானொலி, வைத்தியவிடுதி, பள்ளிக்கூடம் இவற்றிற்கு மக்கள்சர்க்காரான மத்திய பீடத்தின் அனுமதிமூலம் பஞ்சாயத்தார் செலவிடவேண்டும்!

ஒவ்வொருவனும் உழவேண்டிய நில அளவைக் குறிப்பிட்டிருக்கவேண்டும். அந்த அளவில் உழுதவர் இறந்து போனால், அவர் வாரசுக்கு அல்லது வார்சே இல்லாதபோனால், அவர்களுடைய நிலத்தை சொந்தக்காரர்களிடம் தந்து உழச் செய்யவேண்டும்.

ஒரு குறிப்பிட்ட கிராமத்தில் விளையும் பொருள் கிராமத்தாருக்குப் போதாவிட்டால்: அதிகப்படியாக உள்ள நபர்களை வேறு தேவையாகவுள்ள இடத்திற்கு மாற்றவேண்டும்.

இதன்மூலம் கிராமங்களும், தேசமும் சுபிட்சமடையும். இதுவே காந்தி காட்டும் பாதை! உழவனுக்கு நிலம் சொந்தமாக்க, பலாத்காரத்தையும் சட்டத்தையுமே பெரும்பாலாக நம்பியது ரஷ்யாவின் லெனின்! அமைதியையும், அஹிம்சையையும், அன்பையும், பிரசாரத்தையும் கொண்டு வேலை செய்வது காந்தியடிகளின் "லோக சேவா சங்கம்."


## சந்தாதார்கள் -

### விளம்பரம் கொடுக்கும் அன்பர்கள்,

### - ஏஜெண்டுகளுக்கு,

சீரிய சிந்தனைகள், உயரிய அரசியல் கருத்துக்களை அள்ளிக் கொடுப்பதில் நிகரற்று விளங்குவதைப் போலவே, "ஆஸாத்" எடுப்பாக கண்ணைக் கவரும் அமைப்புடன் வெளியிடப்பட வேண்டுமென்பது நம் அவா. சொந்தமாக ஒரு அச்சுக்கூடம் இல்லாமல் அவ்வித மாறுதல்கள் சாத்தியமில்லை. ஆகையால் அச்சுக்கூட ஏற்பாடுகள் பூர்த்தியாகும் வரை "ஆஸாத்" மாதமிருமுறைதான் தங்களை சந்திக்குமென்பதைதெரிவித்துக் கொள்கிறோம்.

மானேஜர்,
"ஆஸாத்" கும்பகோணம்.

லெனின் ஒரு சமயல்காரனுக்குக்கூட ஆளத் தெரியவேண்டும் என்றார், காந்தியோ "சாதாரண தோட்டி" இந்திய கவர்னர் ஜெனரலாகவேண்டும் என்றார்! இவ்விரண்டில் காந்தி காட்டும் பாதையே சாலச்சிறந்தது, இதுவே நமது தேவை!

காந்தீய சோஷலிஸ்டான குமரப்பாவும், இந்த காந்தியத்தையே "காற்றும், நீரும் பொதுவாக இருப்பதுபோல, நிலமும் சமுதாயப் பொதுச்சொத்தாக வேண்டும்." என்று பட்டவர்த்தனமாக மொழிந்துள்ளார்

உழவனுக்கு நிலம் சொந்தமாக்குவது என்பதுதான் நிலத்தைச் சமுதாயத்தின் பொதுச் சொத்தாக்குவது என்பது!

இந்தக்காரியம், செயற்குறியது தான். இது செயல் முறைக்கு ஏற்படாது, என்று கூறுபவர்கள் காந்தீய வாதிகளாக இருக்க முடியாது.

இக்காரியத்தை இன்னும் இரண்டு ஆண்டுகளில் நாம் காண்போம். காந்தியடிகளின் விருப்பப்படி "லோக சேவா சங்கங்கள் லட்சோபலட்சம் உதிக்கப் போகின்றது. காந்தி கருத்துப்படி "கிஸான் மஸ்தூர் பிரஜா ராஜ்" நாட்டப்படத்தான் போகின்றது

ஆளவந்தார்கள் இதற்கானவற்றைச் செய்வதற்குள், காந்தீயசோஷலிஸ்ட்கள் அல்லது லோக சேவா சங்கத் தோழர்கள் முற்கூறியபடி சேவை புரிந்து நிலைமையைப் பக்குவப்படுத்தி, குடியரசைக் குடியானவ அரசு என்பதை ஸ்தாபிக்கவேண்டும்

"குடியரசு" என்று பிரகடனப் படுத்தப்பட்டுள்ளதே, தவிர அது இன்னும் கனியவில்லை.

குடியரசு பூத்துள்ளது. மணம் கமழ்ந்து வருகின்றது. இனி பிஞ்சாகி, காயாகிக், கனியாகமாற வேண்டும். அப்போழுதே முழுப்பயனையும் அனுபவிப்போம்.

குடியரசு கனியாகமாற மலர்ச்சி ஏற்பட்டதே ஜனவரி 26! அந்த மலரில், குடியானவர் தொழிலாளர் அரசு ஏற்படும் என்பதற்கு அறிகுறிகள் காணப்படுகின்றது!

கிசான் - காந்தி, காணும் ராம ராஜ்யம் ஏற்படும் என்ற எண்ணங்கள் எழும்பிச் சுழல்கின்றன!

"உழவனுக்கு நிலம் சொந்தம்" என்ற உன்னதமான சத்திய ஒலி' கிசான்களின் இதயத் துடிப்பு இதை காந்தியடிகள் குரல் எதிரொலித்தது! கிசானும் காந்தியும் இரண்டறக் கலந்து விட்டனர்! கிசான் காந்தியின் சீடர்கள் எனவரய்ப் பறையடிப்பவர்கள், காந்தியடிகளின் கனவைப் பூர்த்திசெய்வார்கள் என்ற நம்பிக்கையிலேயே, கிசான்கள் குடியரசை வரவேற்று, வாழ்த்துக் கூறுகின்றனர்.

கிசான் காந்திகாணும் சோஷலிஸத்தை, நிலத்தைச் சமுதாயப் பொதுச் சொத்தாக்குவதை உழவனுக்கு நிலம் சொந்தமாக்குவதை, லோக சேவா சங்கம் காட்டும் நெறியிலே, குமரப்பா போன்ற காந்தீய சோஷலிஸ்ட்கள் கூறும் பாதையிலே செய்ய, மலர்ச்சி பெற்ற மக்களாட்சி முனையும் என்ற நம்பகத்திலே நாட்டின் ஏழ்மையெலாம் களிப்பாகமாற முனைந்து, "முட்டிக்குமுறியுழை" என்ற மந்திரம் பாராட்டிக் குடியரசைக்குறித்து,

என, "குடியரசு" வாழ்த்துக் காந்தீயம் கலந்து "அறிவாலயம்". பர்டுவதிலே, பரவுவதிலே, நீங்களும் பங்கெடுப்பீர்களாக! வாழ்க குடியரசு! வாழ்க கிசான் காந்தி நாமம்!

காலைப் பட்சி பாடிவரக்
கன்னியரின் பூக்கரங்கள்

கோலம் போட கட்டிளங்
காளையர் கணக்கற்றக் கொடிகளை

நீலவான மீது பறக்க விட
நாட்டின் வறுமையெலாம் ஒழிந்து

ஏலமெலாம் களிப்பாக மாற
ஒப்பற்ற குடியரசு பூத்ததம்மா!

---

## டால்மியாபுரம்.

6ந் ஜூன்மீ 1950, செவ்வாய் மாலை திரு ம. பழனியாண்டி அவர்கள் தலைமையில் டால்மியா ஸிமெண்ட் தொழிலாளர்கள் கூட்டம் ஒன்று நடந்தது. அவ்வமயம், இந்திய பாரலிமெண்ட் மெம்பரும், தமிழ் நாடு தொழிற்பகுதி பொருப்பாளருமான திரு R. வெங்கடராமன் அவர்கள் சிறப்படப் பேசினார்கள் அவர்களுடைய பேச்சினின்று,

சங்கத் தலைவர் காரியதரிசியுடனும் டால்மியா மேனேஜ்மெண்டாருடனும் நடத்திய பேச்சு வார்த்தைகளின் முடிவில் தொழிலாளர்களுடைய பலப்பல பெருங் குறைகளைப்பற்றிய முடிவிற்கு வருவ் விஷயமாக முதலாளி J. டால்மியா அவர்களுடன் கலந்துக் கொள்ளப்படும் என்றும், தாமும் டால்மியாவுக்கு ஒரு கடிதம் எழுதப்போவதாகவும் தெரியவந்தது அவர் மேலும் பேசுகையில், சட்ட பூர்வமாக வேலை நிறுத்தம் செய்ய தொழிலாளர்களுக்குள்ள உரிமையை எடுத்துக் காட்டினர்.

கூட்டமுடிவில் திரு. ம பழனியாண்டி அவர்கள் தொழிலாளர்களின் குறைகளை, உடனுக்குடனே டால்மியா நிர்வாகம், தீர்க்க முன்வரவேண்டுமென்றும இன்றேல் திரு. வெங்கடராமன் அவர்கள் தலைமையிலேயே போராட்டம் நடத்தப்படுமென்றும் கூறினர். கூட்டம இனிதுமுடிந்தது.

## பதினெட்டாம் ஆண்டு விழா.

# ஜாமியா முஹம்மதியா அரபியாவில் கோலாகலக் காட்சி.

## பாடசாலை நிர்வாகி அறிக்கை.

பல்லாரி ஜில்லா, ராயதுர்க்கத்தில் இஸ்லாமிய மார்க்கத் தொண்டை வெற்றிகரமாக்க சிறந்த பணியாற்றிவரும் ஜாமியா முஹம்மதிய்யா அரபியா பாடசாலை நிர்வாகி ஜனாப் சய்யித் இஸ்மாயில சாஹிப் கீழ்க்கண்ட அறிக்கையை வெளியிட்டுள்ளார்:—

2, ஜூன் 1950.

முன்னர் அறிவித்ததற்கேற்ப, ஜாமியா முஹம்மதிய்யா அரபியாவின் பதினெட்டாம ஆண்டு விழா 28, 29 மே 1950-ல் விமரிசையாக கொண்டாடப்பட்டது. பல உலமாக்களும், அரும் பெரும் புலவர்களும் கலந்துகொண்டனர். பிரதேசவாசிகளைத் தவிர வெளியூர் அன்பர்கள் பலரும் வந்திருந்து விழாக்கூட்டத்தை சிறப்புறச் செய்தனர். அனைவருக்கும் உணவு வசதியும் இருப்பிட வசதியும் செய்து தரப்பட்டது. உர்து, ஆங்கிலம், தெலுங்கு, கன்னடம் முதலிய பல பாஷைகளிலும் பிரசங்கங்கள் நிகழ்ந்தன. ஈராண்டு வரவு செலவு கணக்கு பொதுக்கூட்டத்தில் அறிவிக்கப்பட்டது. கட்டுக்கடங்காத கூட்டம் கூடியிருந்தும் ஒழுங்கு நிலவியதை நாம் பாராட்டுகிறோம்.

இருபத்தொன்று உலமாக்களும், பத்தொன்பது முன்ஷிபாசில்களும் இக்கலாசாலையில் பயின்று தேர்ந்தவர்கள். பலர் பாடசாலைகளில் சமூகத் தொண்டாற்றி வருகின்றனர் என்பதிலிருந்தே ஒருவாறு இக்கலாசாலையின் சமூகத் தொண்டை சீர்தூக்கிப்பார்க்க போதுமானதாகும். கலாசாலை புரிந்துவரும் சமூகத்தொண்டு பெரும்பாலும் அதர்யே மதராஸ், **ஜனாப் ஹாஜி. எம். அப்துற் ரஹ்மான் சாயபு** அவர்களின் உதவியாலேயே என்று கூறுமிடத்து நாம் பெருமைகொள்கிறோம். இன்றுவரை அன்னார் இருபதாயிரம் ரூபாய் நன்கொடையளித்ததன்றி பல நண்பர்களின் உதவியையும் நமக்களித்துள்ளார். சோதனைமிக்க இக்காலத்தில் அன்னார் உதவ முன்வந்திராவிடில் எவ்வித பயங்கர விளைவு ஏற்பட்டிருக்கும் என்று நம்மால்கூற இயலாது. “சர்வ வல்லமை பொருந்திய இறைவன் அன்னாருக்கு நற்பயனளித்து நீண்டகாலம் சீரும் சிறப்புடன் வாழ அருள் புரிவானாக. ஆமீன்!” என்று கலாசாலை அங்கத்தினர், மாணவர்கள், ஆசிரியர்கள் அனைவரும் பிரார்த்திக்கிறோம்.

**(ஒப்பம்) சையித் இஸ்மாயில்,**
நிர்வாகி,
ஜாமியா முஹம்மதியா அரபியா,
**ராயதுர்க்கம், பல்லாரி ஜில்லா.**

ஆஸாத்

மக்களின் உள்ளத்தை மகிழ்விக்கும்
மனோரம்யமான பட்டு-நூல் ஜவுளி தினுசுகள்
சாயம் சரிகை
உறுதி உழைப்பு
அழகு அனைத்தும்
ஒருங்கே
அமையப் பெற்று
சொந்தத் தறியில்
தயார்
செய்யப்படும்
வியாபாரிகளுக்கும்
மற்றவர்களுக்கும்
நயமான
விலைக்கு
கிடைக்குமிடம்
பாரத் ஸ்டுடியோ

டாக்டர். எ. மதுரம் சன்ஸ்,

60 YEARS
NAME AND FAME

# GURU

**குழந்தைகளுக்கு கைகண்ட மருந்துகள்**

1 கஸ்தூரி மாத்திரை
2 கோரோஜனை மாத்திரை
3 ஹெல்த் மாத்திரை
4 பால் உப்பு
5 வேப்பெண்ணை தைலம்
6 குரு தைலம்
7 குரு பாலர் டானிக்
8 கக்குவான் மருந்து

குரு தைலம்

மகா சஞ்சீவி.

குரு மருந்துசாலை, : திருச்சிறுப்பள்ளி.

குரு பல்பொடி சகல தந்த ரோகங்கள் தீரும்.

---

நாங்கள் நவீன டிசைன்களில் ரிஸ்ட் வாட்சுகள், கிளாக்குகள், அலாரம் டைம்பீஸ்கள் ஏராளமாக ஸ்டாக் செய்திருக்கிறோம்

உத்திரவாதத்துடனும், விலை மலிவாகவும் விற்பனை செய்கிறோம்.

## ஜலால் & சன்ஸ்,

வாட்சு வியாபாரிகள் (கவர்மெண்ட் ரயில்வே சப்ளையர்கள்)

**46, ராட்டன் பஜார், P. T. சென்னை**

பிராஞ்சுகள்:— மவுண்ட் ரோடு. சென்னை
அபித் ரோடு, ஹைதராபாத்.




---

பிரசித்தி பெற்ற

# பிர்மா புகையிலையை

உபயோகியுங்கள்.

புரோப்ரைட்டர்:— **A. N. இரத்தினம் & கோ.,**
திருவாரூர்.

ஸ்தாபிதம் 1909.

தந்தி விலாசம்:—"கோகுல்" டெலிபோன் நே. 57.

# டி. எஸ். ஆர். அண் கோ.,

## கும்பகோணம்.

பிராஞ்சு:—
மதருஸ் & மன்னார்குடி.

**சந்தனாதித் தைலம்**

**அரைக்கீரை விதைத் தைலம்**

**கோகுல் கூந்தல் தைலம்**

கூந்தலுக்கு வளர்ச்சியையும்,
குளிர்ச்சியையும்
கொடுப்பதில் நிகரற்றவை.

மற்றும்

கோகுல் ஊதுவத்திகள் வாசனைப் பாக்கு
பல காய்கறி ஊருகாய் வாசனை சுண்ணும்பு
ரோஜாப்பூ குல்கந்து அரகஜா

முதலிய இதர சாமான்களும் கிடைக்கும்.

Printed by V. Jayaram at his Sri Rama (Power) Printing Works, 38, Sarargapani East Vadamboki St, Kmu
Edited and Published by Moulana Abdul Hakeem, 4, Kumbeswaran South, Kumbakonam.